PGIE
POST GRADUATE INSTITUTE OF ENGLISH

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆண்டறிக்கை
2024

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
ஆண்டறிக்கையும் கணக்குகளும்
2024

				பக்கம்
	பொருளடக்கம்			**பக்கம்**
	ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தொலைநோக்கும் செயற்பணியும்			**03**
	குறிக்கோள்களும் நோக்கங்களும்			**04**
	பணிப்பாளரின் செய்தி			**08**
1.	**நிறுவனக் கட்டமைப்பு**			**11**
	(அ)	**ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உறுப்பினர்கள்**		
		i)	முகாமைத்துவ சபை	**12**
		ii)	இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	**13**
		iii)	இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	**14**
		iv)	ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்	**15**
		v)	பணியாளர் வகைப்பாடு	**17**
2.	**பணிப்பாளரின் மீளாய்வு**			
	(அ)	சுருக்கமான அறிமுகம்		**18**
	(ஆ)	முக்கிய நிகழ்வுகளின் சுருக்கமான பார்வை		**22**
	(இ)	நிதிச் செயற்றிறன்		**28**
	(ஈ)	சவால்கள்		**29**
	(உ)	எதிர்கால திட்டங்கள்		**31**
	(ஊ)	ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களும் மாணவர்களின் விபரங்களும்		**32**
	(எ)	மீளாய்வு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான விபரங்கள்		**35**
	(ஏ)	மனித வளங்கள்		**36**
3.	**பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரங்கள்**			**37**
4.	**நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் எதிர்கால எதிர்பார்ப்புகள்**			**41**
5.	**கணக்காய்வுக் குழு அறிக்கை**			**44**
6.	**கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள்**			**46**
7.	**கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**			**93**
8.	**கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதிலிறுப்பு**			**101**

தொலைநோக்கு

இலங்கையில் ஆங்கிலமொழி கற்பதற்கும் அத்துடன் பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் சார்பில் தலைமை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவைகளுக்கும் போக்குகளுக்கும் அமைவாக படைப்புகளை ஆக்கும் திறனுள்ளவர்களாகவும் சூழ்நிலை சார்ந்தவர்களாகவும் முன்னுரிமையாளராக பிரபல்யமடைதல்.

செயற்பணி

சுயமாக கற்பதன் மூலம் ஆங்கிலமொழி மற்றும் இலக்கிய கல்வியில் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான கல்வி, ஆராய்ச்சி, ஆசிரியர் கல்வி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கற்றலில் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் உட்பட தேசிய மட்டத்தில் ஆங்கில மொழிக் கல்வியினை மேம்படுத்துவதும் அதற்கு தலைமைத்துவம் வழங்குதலும்.

குறிக்கோள் 1: ஆங்கில கற்கைகள் மற்றும் கல்வியில் உயர் தரமிக்க பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை/பாடநெறிகளை வழங்குதல்

நோக்கங்கள்

1.1. நடைமுறையிலுள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்

1.2. தேசிய ரீதியிலான தேவைகளுக்கு அமைவாக புதிய மற்றும் புத்தாக்கமிக்க நிகழ்ச்சித்திட்டங்களை/ பாடநெறிகளை அபிவிருத்தி செய்தலும் வழங்குதலும்

தந்திரோபாயங்கள்

1.1 நடைமுறையிலுள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்

1.1.1. பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் (HEIs) மீளாய்வுக்கான இலங்கை தகைமைக் கட்டமைப்பு (SLQF) கைந்நூல் தொடர்பில் தற்போதுள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வுசெய்து இடைவெளிகளை இனங்காணுதல்.

1.1.2. தற்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் (TLSC) நிகழ்ச்சித்திட்டத்தில் முதுகலைமாணிப் பட்டத்தை (MA) திருத்தி மீளக்கட்டமைத்தல்.

1.1.3 தற்போதுள்ள பாடநெறி சாதனங்களை மீளாய்வுசெய்தல் மற்றும் அவற்றைத் திருத்துதல் அல்லது புதிய சாதனங்களை வடிவமைத்தல் (PPE, BE-2025, TESL – 2026/7)

1.2 தேசிய ரீதியிலான தேவைகளுக்கு அமைவாக புதிய மற்றும் புத்தாக்கமிக்க நிகழ்ச்சித்திட்டங்களை/ பாடநெறிகளை அபிவிருத்தி செய்தலும் வழங்குதலும்

1.2.1 உரிய கற்கைப் பரப்புகளை இனங்கண்டு, அதற்கேற்ப புதிய நிகழ்ச்சித்திட்டங்களை/பாடநெறிகளை விருத்திசெய்தல்.

1.3 கேள்விக்கு இணங்க தற்போதுள்ள குறுங்கால பாடநெறிகளை கற்பித்தல்

1.3.1 கேள்விக்கு இணங்க தற்போதுள்ள குறுங்கால பாடநெறிகளை கற்பித்தல்

குறிக்கோள் 2: மிகவும் வினைத்திறனான மற்றும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சேவையை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர் சமூகத்திற்கு வழங்கும் பொருட்டு நிர்வாகச் செய்முறைகளையும் உட்கட்டமைப்பையும் பேணுதலும் விருத்தி செய்தலும்

நோக்கங்கள்

2.1 நிர்வாகச் செய்முறைகளை மேம்படுத்தல்

2.2 நிறுவனத்தின் மனிதவள (கல்விசார் மற்றும் நிர்வாக) ஆற்றலை வலுப்படுத்தல்

2.3 தரவுகளைப் பாதுகாத்தல் மற்றும் சேமித்து வைத்தல் முறைமையினை அபிவிருத்தி செய்தல்

2.4 பசுமை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

2.5 தற்போதுள்ள பௌதீக உட்கட்டமைப்பு தேவைகளை மதிப்பிடுதல்

தந்திரோபாயங்கள்

2.1 நிர்வாகச் செய்முறைகளை மேம்படுத்தல்

2.1.1 செய்முறைகளை வினைத்திறனாக்குவதற்கு தற்போதுள்ள நிர்வாக செய்முறைகளிலுள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்தல்.

2.1.2 மாணவர் தகவல் மற்றும் கணக்கீட்டு/நிதி முகாமைத்துவ முறைமையை முகாமிப்பதற்கு மென்பொருள் அடிப்படையிலான தீர்வை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல்.

2.2 நிறுவனத்தின் மனிதவள (கல்விசார் மற்றும் நிர்வாக) ஆற்றலை வலுப்படுத்தல்

2.2.1 கல்விசார் மற்றும் நிர்வாக மனிதவள தேவைகளை மீளாய்வுசெய்து பூர்த்திசெய்தல்

2.2.2 நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ஆற்றலையும் திறன்களையும் அபிவிருத்திசெய்தல்

2.3 முறையான தரவு அணுக்கம் மற்றும் பாதுகாப்பிற்கான முறைமைகளை அபிவிருத்தி செய்தல்

2.3.1 ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தரவுகளை அணுகுவதற்கான உரிமைகளையும் அவற்றின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான முறைமைகளை நடைமுறைப்படுத்துதல்

2.4 பசுமை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

2.4.1 பயன்படுத்தப்படும் கடதாசி மற்றும் பொலித்தீன் அளவைக் குறைத்தல்

2.4.2 பொருத்தமான கழிவு முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்துதல்

2.5 தற்போதுள்ள பௌதீக உட்கட்டமைப்பு தேவைகளை மதிப்பிடுதல்

2.5.1 தற்போதுள்ள உட்கட்டமைப்பு தேவைகளை இனங்காணுதல், அதன்பின்னர் அந்த தேவைகளை நிவர்த்திசெய்தவற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

2.5.2 அந்த தேவைப்பாடுகளை நிவர்த்திசெய்தவற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

குறிக்கோள் 3 : நிறுவனத்தின் ஆராய்ச்சி வழிமுறை மற்றும் ஆராய்ச்சி ஆற்றலை விருத்தி செய்தலும் பலப்படுத்துதலும்

நோக்கங்கள்

3.1 புத்தாக்க ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதனை வெளியிடுவதற்கு கல்விசார் மற்றும் உரிய நிர்வாகப் பதவியணி உறுப்பினர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்

3.2 கல்விசார் பதவியணியின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்

3.3 மாணவர்களின் ஆராய்ச்சியை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்

3.4 தேசிய முன்னுரிமைகள் தொடர்பில் தீர்வுகளை வழங்குவதற்கு ஒத்தாசை நல்கும் நிறுவன ரீதியிலான ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தலும் மேற்கொள்தலும்

3.5 இத்துறையில் ஆராய்ச்சியை ஊக்குவித்து வெளியிடுதல்

தந்திரோபாயங்கள்

3.1 ***புத்தாக்க ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதனை வெளியிடுவதற்கு கல்விசார் மற்றும் உரிய நிர்வாகப் பதவியணி உறுப்பினர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்***

3.1.1 *உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்காளர்களுடன் கூட்டிணைவு ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு கல்விசார் பதவியணியினருக்கு வாய்ப்புகளை அதிகரித்தல்.*

3.1.2 *அங்கீகரிக்கப்பட்ட வெளியீடுகளில் ஆராய்ச்சி வெளியீட்டை ஊக்குவித்தல்.*

3.2 ***கல்விசார் பதவியணியின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்***

3.2.1 *கல்விசார் பதவியணி உறுப்பினர்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி* (CPD) *தேவைகளை இனங்காணுதல்.*

3.3 ***மாணவர்களின் ஆராய்ச்சியை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்***

3.3.1 *மாணவர்களின் ஆராய்ச்சியை வெளியிடுவதற்கான நிகழ்வுகளை நடாத்துதல்*

3.3.2 *தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் ஆராய்ச்சியை முன்வைக்க மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல்.*

3.4 ***தேசிய முன்னுரிமைகள் தொடர்பில் தீர்வுகளை வழங்குவதற்கு ஒத்தாசை நல்கும் நிறுவன ரீதியிலான ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தலும் மேற்கொள்தலும்***

3.4.1 *நிறுவன ரீதியான ஆராய்ச்சிக்கான நிதியீட்டத்தை அளிப்பதில் முனைப்புடன் ஈடுபடுதல்*

3.4.2 *நிறுவன ரீதியான ஆராய்ச்சிப் பணிகளை கோட்பாட்டாக்கம் செய்தல், விருத்திசெய்தல் மற்றும் மேற்கொள்தல்*

3.4.3 *நிறுவன ரீதியான ஆராய்ச்சியை வெளியிடுதல்*

3.5 ***இத்துறையில் ஆராய்ச்சியை ஊக்குவித்து வெளியிடுதல்***

3.5.1 *ஆராய்ச்சியாளர்கள் தமது பணிகளை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்*

3.5.2 *இந்தத் துறையில் முன்னைய ஆராய்ச்சியானது தற்போதைய ஆராய்ச்சியாளர்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல்*

3.5.3 *ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்*

3.5.4 *தற்கால ஆராய்ச்சி தலைப்புகள் தொடர்பிலான கலந்துரையாடலை ஊக்குவித்தல்*

குறிக்கோள் 4: ஆங்கிலக் கற்கைகளுக்கென அர்ப்பணிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச அமைப்பொன்றாக இந்நிறுவனத்தை நிலைநிறுத்துதல்

நோக்கங்கள்

4.1 *தேசிய அபிவிருத்திக்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிபுணத்துவம் பங்களிப்புச் செய்யக்கூடிய துறைகளையும் நிறுவனங்களையும் இனங்காணுதல்*

4.2 *ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சர்வதேச அடைவு எல்லையை விரிவாக்குதல்.*

தந்திரோபாயங்கள்

4.1 ***தேசிய அபிவிருத்திக்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிபுணத்துவம் பங்களிப்புச் செய்யக்கூடிய துறைகளையும் நிறுவனங்களையும் இனங்காணுதல்***

4.1.1 *கொள்கை வகுப்பில் ஈடுபட்டுள்ள முக்கிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் கொள்கை முன்னெடுப்புகளை வடிவமைக்க தந்திரோபாய உள்ளீடு மற்றும் நிபுணத்துவத்தை வழங்குதல்.*

4.1.2 *தேசிய கல்வி மொழிக் கொள்கைகளை ஆதரிக்க புலமைசார் உள்ளீட்டை வழங்குதல்.*

4.1.3 *அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அக்கறைதாரர்களின் தொழில்சார் அபிவிருத்திக்கு ஆதரவளித்தல்.*

4.1.4 *தேசிய மட்டத்திலான முயற்சிகளுக்கு புலமைசார் உள்ளீட்டை வழங்குதல்.*

4.2 ***ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சர்வதேச அடைவு எல்லையை விரிவாக்குதல்***

4.2.1 *சர்வதேச பட்டப்பின் படிப்பு மாணவர்களை ஈர்ப்பதற்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொள்தல்.*

பணிப்பாளரின் செய்தி

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன கட்டளைச்சட்டம் என்பவற்றின் மூலம் தாபிக்கப்பட்ட ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இலங்கையில் ஆங்கிலக் கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரேயொரு பட்டப்பின் படிப்பு நிறுவனமாக இருப்பதுடன், நிறுவனமானது கல்வியியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்வல்லுநர்களுக்கு உயர் தரமான பட்டப்பின் ஆங்கில மொழி மற்றும் இலக்கிய கல்வியினை வழங்குவதில் பிரதான வகிபாகமொன்றை ஆற்றியுள்ளது. முதன்மை மானுடவியல் மற்றும் சமூகவியல் ஆராய்ச்சி நிறுவனமொன்றாக இந்த நிறுவனத்தின் நற்பெயர் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIE) பழைய மாணவர்கள் அநேகமாக அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களிலும் சிரேஷ்ட பதவிகளை வகிப்பதுடன் பிரசித்தமான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதி (PhDs) பட்டங்களையும் மேலதிக தகைமைகளையும் தொடர்வதற்கு இந்த நிறுவனத்தின் முதுகலை மாணி (MA) பட்டங்களையும் பலர் பயன்படுத்தியுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது கணிசமான நிதி மற்றும் மனிதவளங்கள் சார்ந்த சாவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மொழிகள், இலக்கியங்கள் மற்றும் மொழியியல் மீதான சர்வதேச மாநாடு 2024 என்ற அதன் முதலாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை நடாத்த முடிந்தது, இது எங்கள் பயணத்தில் ஒரு முக்கிய மைற்கல்லைக் குறிக்கிறது. மேலும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது மூன்று குறுங்கால பாடநெறிகளையும் சில ஆராய்ச்சிப் பகிர்வு அமர்வுகளையும் ஒழுங்குசெய்தது. புகழ்பூத்த சர்வதேச

கல்விமான்களுடன் பயிற்சிப்பட்டறைகளையும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஒழுங்குசெய்தது, அதன்மூலம் அதன் தற்போதய மாணவர்களினதும் பழைய மாணவர்களினதும் அறிவை அதிகரித்து அவர்களின் வலையமைப்புகளை விரிவாக்குவதற்கான அரிய வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் புலம்பெயர்தல் என்பவற்றின் பொருட்டு இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிப்பதற்கான தகைமைகளின் கடும் கேள்வி நிலவும் சூழ்நிலையில் உலகில் ஏதேனும் கல்வி அல்லது தொழில்சார் சூழ்நிலையில் இலங்கையில் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழியினை கற்பிப்பவர்களுக்கு ஏற்புறக்கூடிய வகையில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் உயர்தரமான, சூழ்நிலை ரீதியில் துலங்கக்கூடிய பட்டப்பின் படிப்பு தகைமைகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

கலாநிதி ரொமொலா ரசூல்
பணிப்பாளர்
PhD (மெல்பன், அவுஸ்திரேலியா)
MA (ஆசிரியர் கல்லூரி, கொலம்பியா, ஐக்கிய அமெரிக்கா)
BA (களனி, இலங்கை)

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2005 ஒக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்டதும் 1417/12 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் மூலமும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழும் சனாதிபதி அவர்களினால் செய்யப்பட்ட கட்டளையின் கீழ் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது தாபிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

1. நிறுவனக் கட்டமைப்பு



(அ) (i) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
9 (1) (அ) பணிப்பாளர்		
1	கலாநிதி றொமொலா ரசூல்	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
9.1.(ஆ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது உயர் கல்வி என்னும் விடயம் குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய வேறு அமைச்சின் செயலாளர்		
2	திருமதி சசிக லியனகே	பணிப்பாளர், வெளிநாட்டு கல்வி, கல்வி அமைச்சு
9 (1) (இ) ஆணைக்குழுவின் ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான நிலையியல் குழுவின் தலைவர்		
3	கலாநிதி பீ.எல்.எவ்.அபேவிக்ரம	சிரேஷ்ட விரிவுரையாளர் / DELT, கொழும்பு பல்கலைக்கழகம்
9.1.(ஈ) பல்கலைக்கழக ஆங்கில கல்விப் பிரிவின் தலைவர்;		
4	கலாநிதி எஸ்.ஏ.ஏ.கே.சதரசிங்க	தலைவர், மொழிக்கல்வி பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9.2.(அ) பேரவையின் பிரதிநிதி		
5	கலாநிதி என்.சி.குமாரசிங்க	பேரவைப் பிரதிநிதி
9.2. (ஆ) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆங்கில மொழி பற்றிய பேராசிரியர்கள் ஐவர் அல்லது ஆங்கிலம், ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் மொழிக் கல்வி (ஏற்புடையதானவாறு) பாடங்களைக் கற்பித்தலுக்கு பொறுப்பான கல்விப் பிரிவின் தலைவர்கள்		
6	வாழ்நாள் பேராசிரியர் நிலூபர் டீ மெல்	ஆங்கில மொழி பற்றிய வாழ்நாள் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்
7	சிரேஷ்ட பேராசிரியர் சி.டி.எஸ். வெத்தேவே	சிரேஷ்ட பேராசிரியர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, மானுடவியல் பீடம், களனிப் பல்கலைக்கழகம்
8	சிரேஷ்ட பேராசிரியர் நெலுக்க சில்வா	சிரேஷ்ட பேராசிரியர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
9	பேராசிரியர் எம்.லலித் ஆனந்த	முன்னாள் தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
10	திருமதி பி.நாகசுந்தரம்	முன்னாள் தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
9.2. (இ) பல்கலைக்கழக மூதவையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்		
11	பேராசிரியர் ஜீ.ஆர்.ஆர்.ரணவக்க	இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவைப் பிரதிநிதி, விலங்கியலில் சிரேஷ்ட பேராசிரியர், விலங்கியல் கல்வி பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9.2. (ஈ) கல்விப் பிரிவு அதன் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்		
12	கலாநிதி ஆர்.எல்.ஏ.எஸ். ராஜபக்ஷ	சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் - பிரதிநிதி, கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
13	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் - பிரதிநிதி, கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்

9.2. (உ) தொழினுட்ப, கல்வி அல்லது நிர்வாக துறை சார்பில் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர்களிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்		
14	**திரு.பி. ரனேபுர**	**முன்னாள் செயலாளர், திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி அமைச்சு மற்றும் முன்னாள் செயலாளர், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
15	**தேசபந்து பேராசிரியர் எம்.ஏ.டி.எஸ்.ஜே.எஸ். நிரிஎல்ல**	**பொது மற்றும் சர்வதேச சட்டக் கல்வி பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்**
9.2.(ஊ) ஆசிரியர் கல்வியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு தேசிய கல்வி நிறுவனத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்		
16	**கலாநிதி எஸ்.ஏ.டி. சமரவீர**	**பிரதி பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்**
பொது திறைசேரியின் பிரதிநிதி		
	திருமதி கே.ஏ. ரம்யா காந்தி	**கணக்குத் தணிக்கையாளர் நாயகம், கணக்குத் தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகம், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

(ii) இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
12. (1) (அ) தலைவராக இருக்க வேண்டிய பணிப்பாளர்;		
1	**கலாநிதி ரொமொலா ரசூல்**	**தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்** (2016-03-01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரும் வண்ணம்)
12. (1) (ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய நூலகம் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய, நிறுவனத்தின் கற்றல் வளங்களுக்கான பொறுப்பாளர்;		
2	**திருமதி எச்.பி.எஸ்.டி. குணசேகர**	**பதில் நூலகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
12. (1) (இ) நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படுவதான குறித்த சபைக்கு அல்லது கல்வி சபைக்கு உரிய நிறுவனத்தின் நிரந்தர ஆசிரியர்கள்;		
3	**கலாநிதி எச்.டி. விஜேசேக்கர** (2024.03.13 ஆம் திகதி வரை)	**சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
4	**கலாநிதி அக்ரா ராஜபக்ஷ**	**சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
5	**திருமதி எம்.ஐ. ஜான்ஸ்**	**சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
12. (1) (ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் இரண்டு மாணவர்கள்;		
6	**திருமதி எம்.எப். ரஹமதுல்லா**	இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
7	**திருமதி பி.எஸ். கொடிப்பிலி ஆரச்சி**	இருமொழிக் கல்வி (BE)

12. (1) உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்;		
	கலாநிதி சுமுது எம்போகம	**தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு,** **கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்**
12. (1) (ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் இருவர்;		
9	**கலாநிதி பி.எம்.கே. பெரேரா**	**சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்**
10	**கலாநிதி என்.கே. அபேசேகர**	**மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
12. (1) (எ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்போந்த வகுதிகள் எவற்றின் கீழும் வராத ஆசிரியர்கள் இருவர்;		
11	**கலாநிதி வீ.வீ. மெதவத்தகெதர**	**சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்** **(2021-04-01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரும் வண்ணம்)**
12	**திருமதி பி. நாணயக்கார**	**முன்னாள் இருமொழிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு** **(2021-04-01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரும் வண்ணம்)**

(iii) இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விச் சபையின் உறுப்பினர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
12. (1) (அ) தலைவராக இருக்க வேண்டிய பணிப்பாளர்;		
1	**கலாநிதி ரொமொலா ரசூல்**	**தலைவர் / பணிப்பாளர்,** **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
12. (1) (ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய நூலகம் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய, நிறுவனத்தின் கற்றல் வளங்களுக்கான பொறுப்பாளர்;		
2	**திருமதி எச்.பி.எஸ்.டி. குணசேகர**	**பதில் நூலகர்,** **இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
12. (1) (இ) குறித்த சபைக்கு அல்லது நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படுவதான கல்விச் சபைகளுக்குப் பொருத்தமுடையதாகவுள்ள நிறுவனத்தின் நிரந்தர ஆசிரியர்கள்;		
3	**கலாநிதி எச்.டி.விஜேசேக்கர** (2024.03.13 ஆம் திகதிவரை)	**சிரேஷ்ட விரிவுரையாளர்,** **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
4	**கலாநிதி அக்ரா ராஜபக்ஷ**	**சிரேஷ்ட விரிவுரையாளர்,** **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**
5	**திருமதி எம்.ஐ.ஜான்ஸ்**	**சிரேஷ்ட விரிவுரையாளர்,** **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்**

12. (1) (ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் இரண்டு மாணவர்கள்;		
6	**திருமதி டி.ஏ.ஏ.டிமன்சி**	**மாணவப் பிரதிநிதி (ஆங்கிலத்தை தொழில்முறை ரீதியில் கையாளுதல்)**
12. (1) (உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்;		
7	**கலாநிதி டி.ஈ.தேவேந்திர**	**சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
8	**பேராசிரியர் வோல்ரெர் பெரேரா**	**வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்**
12. (1) (ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் இருவர்;		
9	**கலாநிதி பி. மனுரத்ன**	**தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, களினி பல்கலைக்கழகம்**
	திருமதி பி.வீ.என். பெரேரா	**சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**
12. (1) (எ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்போந்த வகுதிகள் எவற்றின் கீழும் வராத ஆசிரியர்கள் இருவர்;		
10	**பேராசிரியர் ஆர்.எம்.சீ.ஜயத்திலக்க**	**தலைவர், ஆங்கிலம் மற்றும் மொழியியல் கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**

(iv) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்

நிரந்தர பதவியணி உறுப்பினர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
1	**கலாநிதி றொமொலா ரசூல்** PhD (அவுஸ்திரேலியா)	**பணிப்பாளர்**
2	**கலாநிதி எச்.டி.விஜேசேகர** PhD (QUT, அவுஸ்திரேலியா) (2024.03.13 ஆம் திகதிவரை)	**சிரேஷ்ட விரிவுரையாளர்**
4	**கலாநிதி அக்ரா ராஜபக்ஷ** *PhD (Arizona State பல்கலைக்கழகம்)*	**சிரேஷ்ட விரிவுரையாளர்**

5	**திருமதி எம்.ஐ. ஜான்ஸ்** ***TESL* இல் *MA (PGIE/OUSL), MPhil* (களனி)**	**சிரேஷ்ட விரிவுரையாளர்**
6	**திரு. டபிள்யூ.டி.ரீ. திலகரத்ன** MHRM (கொழும்பு) (2024.04.18 ஆம் திகதி முதல்)	**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்**
7	**திருமதி. எஸ்.சி. முனசிங்க** நிதியில் MBA (கொழும்பு) (2024.08.21 ஆம் திகதி வரை)	**உதவி நிதிப் பொறுப்பாளர்**
	திரு. ஜீ.ஏச். காமினி *MBA (SJP)* (2024.08.22 ஆம் திகதி முதல்)	
8	**திருமதி ஜி.பி.ஐ.டி. சிறிவர்தன**	**முகாமைத்துவ உதவியாளர்**
9	**திரு. எச்.என்.என்.பெரேரா** (சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையில்)	**முகாமைத்துவ உதவியாளர்**
11	**திருமதி ஏ.ஆர்.எஸ்.கே. ராஜபக்ஷ**	**முகாமைத்துவ உதவியாளர் - கணக்கு பதியுநர்**
12	**திருமதி ஏ.ஜீ.ஆர்.எம்.டி.கே.ரணவீர**	**முகாமைத்துவ உதவியாளர்**
13	**திரு.ஆர்.யு. ஜயசிங்க**	**அலுவலக உதவியாளர்**

ஒப்பந்த பதவியணி உறுப்பினர்கள்

	பெயர்	**பதவிப் பெயர்**
1	**திரு.ஈ.கே.என் தர்மரத்ன** MBA (களனி) ஓய்வுக்கால லீவு (2023-05-01 - 2024-04-17)	**பிரதிப் பதிவாளர்**
2	**திருமதி எஸ். செனவிரத்ன** MA (இலண்டன் பல்கலைக்கழக கல்லூரி, ஐக்கிய இராச்சியம்) (2024.06.15 ஆம் திகதிவரை)	**விரிவுரையாளர்**
3	**திருமதி என்.ரீ. விஜேகுணவர்தன** MA (கீசன் பல்கலைக்கழகம், ஜேர்மனி) (2024.12.12 ஆம் திகதிவரை)	**விரிவுரையாளர்**

4	**பி.எம். வெட்டேவா** **MA**	**விரிவுரையாளர்**
4	**திருமதி எஸ்.எல். ரணசிங்க** MSc. (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	**கல்வி ஒருங்கிணைப்பாளர்**
5	**திருமதி டி.ஏ.என் டி சில்வா** BSc. (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்)	**கல்வி ஒருங்கிணைப்பாளர்**
6	**திரு.பீ.எம் குமநாயக்க** BA (ஸ்ரீ ஜயவர்தனபுர) (2024.03.15 ஆம் திகதிவரை)	**கருத்திட்ட உதவியாளர்**
7	**திரு.டபிள்யு.ஜீ.ஐ.எம். ஹேரத்** BIS (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் – Reading) 2024.10.15 ஆம் திகதிவரை)	**செயற்பாட்டு உதவியாளர்**

ஊழியர் வகைப்படுத்தல்				
சேவை வகுதி	சம்பள குறியீடு	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	2024-12-31 ஆம் திகதியிலுள்ளவாறு உண்மையான பதவியணி	2024-12-31 ஆம் திகதியிலுள்ளவாறு வெற்றிடம்
ஆரம்ப மட்டம்				
ஆரம்ப தரம் – திறனற்ற	PL - 1	2	1	1
இரண்டாம் நிலை மட்டம்				
முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாராத	U – MN 1	5	4	1
மூன்றாம் நிலை மட்டம்				
கனிஷ்ட நிறைவேற்றுத் தரத்திலுள்ளவர் / முகாமையாளர்கள்	U – EX 1	1	1	1
சிரேஷ்ட மட்டம்				
மத்திய மட்ட நிறைவேற்றுத் தரத்திலுள்ளோர்	U – EX 2	1	1	1
விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர்	U – AC 3	4	2	2
பணிப்பாளர்	U – AC 5	1	1	
மொத்தம்		**14**	**10**	**4**

2. பணிப்பாளரின் மீளாய்வு

(அ) சுருக்க அறிமுகம்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் உட்பட பல பட்டப்பின் படிப்பு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானமானது 2024 ஆம் ஆண்டிலும் இதை எதிர்மறையாகப் பாதித்தது. புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், தற்போதுள்ள பாடநெறிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அதிகரித்துவரும் அழுத்தத்தில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் இருந்த இந்தச் சூழமைவில், வழங்கப்படும் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை உறுதி செய்வதே சவாலாக இருந்தது.

இலங்கையில் ஆங்கிலக் கற்கைகளுக்கு பங்களிப்பதற்கான புதிய வழிகளைத் தேடுவதன் மூலமும், வருமானத்திற்கான புதிய வாய்ப்புகளை கண்டறிவதன் மூலமும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் இந்தச் சவால்களுக்கு துலங்கலைக் காட்டியது. 2024 ஆம் ஆண்டில், அரச கல்வி முறைமையில் 50 ஆசிரியர்களைக் கொண்ட புதிய குழுவிற்கு இருமொழிக் கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை வழங்குவதன் மூலமும், கல்வி அமைச்சின் இருமொழிக் கல்விப் பிரிவால் தெரிவுசெய்யப்பட்ட அரச முறைமையிலிருந்தான 100 ஆசிரியர்களுக்கு உள்ளடக்கம் மற்றும் மொழி ஒன்றிணைந்த கற்றல் (CLIL) குறித்த குறுங்கால பாடநெறியை வழங்குவதன் மூலமும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது கல்வி அமைச்சுடனான அதன் உறவை வலுப்படுத்தியது. மேலும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது வேறு இரு குறுங்கால பாடநெறிகளை நடாத்தியது: ஒன்று மியூசியஸ் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான உள்ளடக்கம் மற்றும் மொழி ஒன்றிணைந்த கற்றல் பாடநெறி மற்றும் மற்றொன்று கொழும்பிலுள்ள அரச சார்பற்ற நிறுவனமான கிரிசாலிஸ் நிறுவனத்தின் பதவியணியினருக்கான தொழில்முறை ஆங்கில பாடநெறி.

அதேவேளை, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முதன்மை நிகழ்ச்சித்திட்டமான இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் முதுகலைமாணிப் பட்டம் மேலும் ஒருதடவை வழங்கப்பட்டது, அதற்கு 78 மாணவர்கள் பதிவுசெய்தனர். இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தலில் (TLSC) முதுகலைமாணிப் பட்டம் (MA) தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது அத்துடன் ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை வழங்குதலானது

பணியாட்டொகுதியினரின் பற்றாக்குறை காரணமாக 2025 ஆம் ஆண்டின் முற்பகுதிக்கு பிற்போடப்பட்டது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினரானோர் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள் மற்றும் விருந்தினர் அமர்வுகளை நடாத்துவதன் மூலம் கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் போன்ற பல்வேறுபட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி அவற்றுக்கு ஆதரவளிக்கின்றனர். SLELTEC ஐ (இலங்கை ஆங்கில மொழி ஆசிரியர் கல்வியாளர்கள் மாநாட்டை(ஒழுங்குசெய்வதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற பிற அமைப்புகளுக்கும் அவர்கள் உதவினர் அத்துடன் சேவை செய்யுமாறு அழைக்கப்பட்ட போது பல்வேறுபட்ட அரச பல்கலைக்கழகங்களுக்கும் சேவையாற்றினர்.

ஆராய்ச்சி தொடர்பில், 2024 ஆம் ஆண்டானது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை நிகழ்வைக் குறிக்கின்றது – இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த நிறுவனமானது அதன் பூர்வாங்க சர்வதேச மாநாடான ICLLL 2024 ஐ நடாத்தியது. இந்த நிகழ்வானது பல சிரேஷ்ட மற்றும் புதிய ஆராய்ச்சியாளர்கள், கல்வி நிர்வாகிகள், மற்றும் கூட்டாண்மைத் துறை பங்காளர்களை ஒன்றிணைத்தது, அவர்கள் நாள் முழுவதற்குமான நிகழ்ச்சித்திட்டத்தை அனுபவித்தனர். இந்த நிகழ்வின் தலைமை உரையாற்றுநர், கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தைச் சேர்ந்த உதவிப் பேராசிரியரான பேராசிரியர் கெயில் பிரசாத் ஆவார். சுமார் 150 பேர் கலந்துகொண்ட இம்மாநாட்டில் 32 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன .இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பிதிலகரத்ன .சி .எம் . பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்நிகழ்வைச் சிறப்பித்தார். புல்பிரைட் (Fulbright) ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதிப .ற்றிக் மக்நமாரா, இந்த மாநாட்டின் செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளருக்கு புல்பிரைட் பழைய மாணவர் விருதை வழங்கியமை ஒரு சிறப்பம்சம் ஆகும். இந்தக் கன்னி மாநாட்டின் பிரபல்யத்தைக் கருத்திற்கொண்டு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது 2025 ஆம் ஆண்டில் இரண்டாவது மாநாட்டை ஒழுங்குசெய்ய எதிர்பார்ப்பதுடன் இந்த நிகழ்வு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கால அட்டவணையில் ஒரு நிரந்தர நிலையாக மாறும் என்று நம்புகின்றது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இத்துறையிலுள்ள பல்வேறுபட்ட அக்கறைதாரர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குசெய்வதன் மூலம் இலங்கையில் ஆங்கில மொழி கற்பித்தல் துறையில் அதன் நிலையைத் தொடர்ந்து உறுதிப்படுத்துகின்றது. நாம் ஐக்கிய இராச்சியத்தின் லங்காஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லூக் ஹார்டிங்கை ஏற்பாடுசெய்து அழைத்துவந்தோம், அவர் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் இரண்டு பயிற்சிப் பட்டறைகளை நடாத்தினார். முதலாவது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்காகவும், இரண்டாவது இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கையாளப்படும் கருத்திட்டமான பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பரீட்சையை (UTEL) வடிவமைத்து நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்களுக்காகவும் நடாத்தப்பட்டது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு போதிய நிதியீட்ட மற்றும் மனிதவள ஆதரவு வழங்கப்பட்டால், இலங்கையில் ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கான அளப்பரிய ஆற்றலை அது கொண்டுள்ளது. இந்த நிறுவனம் எதிர்கொள்ளும் ஒரு பெரிய சவால் என்னவெனில் அது குறைந்த அலுவலர்களைக் கொண்டிருப்பது ஆகும். 2024 ஆம் ஆண்டில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் தனது பதவியிலிருந்து விலகியதால் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் அதன் கல்விசார் பதவியணியில் இரண்டு வெற்றிடங்கள் உருவாகியுள்ளன. மேலும், தற்போதுள்ள ஆட்சேர்ப்பு மட்டுப்பாடுகள் காரணமாக, கல்வி சாரா பதவியணியிலுள்ள இரண்டு வெற்றிடங்களை நிறுவனத்தால் நிரப்ப இயலவில்லை. மேலும், குறைந்த ஊதியம் காரணமாக ஒப்பந்த அலுவலர்கள் வேலையில் நீடித்திருக்க ஊக்குவிக்கப்படாததால், அதிக அளவில் அவர்கள் வெளியேறுகின்றனர். அரசால் நிதி நிறுத்தப்படும் தொடர்ச்சியான நிதி நெருக்கடியுடன் சேர்ந்த இந்தச் சூழ்நிலையானது குறைந்த மன உறுதியையும், கிட்டத்தட்ட சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும், அலுவலர்கள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு தொடர்ந்தும் கடப்பாட்டுடன்

உள்ளனர் அத்துடன் அவர்களின் கடப்பாடும் அர்ப்பணிப்பும் இந்த நிறுவனத்தின் மிகப்பெரிய பலமாக நீடிக்கிறது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிரந்தர அலுவலர்களின் சம்பளத்திற்காவது நிதியை வழங்குவதன் மூலம் இந்நிறுவனத்திற்கு அரசு ஆதரவளிக்கும் என்ற அறிகுறிகள் காணப்படுகின்றன எனும் நம்பிக்கையுடன் 2024 ஆம் ஆண்டை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நிறைவு செய்கிறது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டிற்கும் அதன் பிரசைகளுக்கும் வழங்கும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்கு நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களை சுதந்திரமாக இருக்கவிட்டு அவர்களின் பெரும் அழுத்தத்தை இது நீக்கும்.

ஒவ்வொரு பாடநெறி சார்பிலும் (முதுமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா) பதிவுச்செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை

வருடம்	இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் - பட்டப்பின் படிப்பு டிப்ளோமா/ முதுமாணி பட்டம் (TESL)	இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் - முதுமாணி பட்டம் (TLSC)	இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (BE)	ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PPE)	தத்துவக் கலாநிதி	குறுகிய கால பாட நெறிகள்	மொத்தம்
2015 (2014/15)	140	14	-	-		64	**218**
2016 (2015/16)	155	19	-	-		189	**363**
2017 (2016/17)	176	45	-	-		169	**390**
2018 (2017/18)	191	56	-	-		60	**307**
2019 (2018/19)	193	64	40	-		27	**391**
2019/20	203	75	50	67		45	**430**
2020/21	285	107	84	45		50	**568**
2021/22	328	121	52	39	3	-	**543**
2022/23 (	282	113	52	45	2		**494**
2023/24	236	70	46	29	2	34	**417**
2024/25	228	47	56	-	2	89	**422**

மாணவர்களின் பெறுபேறு

வருடம்		TESL			TLSC		PPE	BE	மொத்தம்
		PGDip	MTESL	MA	PGDip	MA	PGDip	PGDip	
2018 (2017/18)		02	-	12	-	02	-	-	**16**
2019 (2018/19)		07	-	17	01	01	-	-	**26**
2020 (2019/20)		08	-	06	01	03	41	-	**59**
2021 (2020/21)		16	-	07	02	-	33	29	**87**
2022 (2021/22)		13	15	15	20	-	25	37	**125**
2023 (2022/23)		30	19	06	20	02	25	05	**107**
2024 (2022/23)	(I)	06	04	05	02	01	-	-	**18**
	(II)	18	11	-	12	02	16	33	**92**

(ஆ) 2024 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டினுள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது நிறுவன ரீதியாக அடைந்துள்ள முக்கிய சாதனைகள் பற்றி இந்தப் பகுதி சுருக்கமாக குறிப்பிடப்படுகின்றது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பிலான மேலதிக விரிவான மற்றும் பகுக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவுகள் இந்த ஆண்டறிக்கையின் அடுத்துவரும் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- COVID தொற்று நிலவிய காலப்பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட முழுமையான Google வகுப்பறை முறைமையானது நிறுவனத்தினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டது. ஆயினும் Zoom உரிமப்பத்திரங்களை கொள்வனவு செய்யும் செலவு விரைவாக அதிகரித்தமையினால், கற்பித்தலுக்காக Zoom கணக்குகளின் மொத்தக் கொள்வனவை செய்துள்ள திறந்த பல்கலைக்கழகத்துடன் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் இணைந்து 10 கணக்குகளை பெற்றது, அதனூடாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் இணையவழி கற்பித்தல் தேவைகளை பூர்த்திசெய்ய முடியும். இந்த நடவடிக்கையானது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு கணிசமான சேமிப்பிற்கு வழிகோலியது. 2024 ஆம் ஆண்டில்,

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது அதன் கூகுள் வகுப்பறை (Google Classroom) வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்தியதுடன், மாணவர்களுக்குக் கிடைக்கும் கற்றல் வளங்களையும் அதிகரித்ததுஅத்துடன் ., அதன் இருவழித்தொடர்பு ஆற்றலையும் மேம்படுத்தியது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தற்போதுள்ள மற்றும் புதிய மாணவர்கள் அனைவரும் 'ousl.lk' களத்துடன் (‘ousl.lk’ domain) தனித்துவமான PGIE மின்னஞ்சல் முகவரியொன்றைப் பெறுகின்றனர். இந்த தனித்துவமான மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி, கலந்துரையாடல் மன்றங்கள், பல்தேர்வு வினாக்கள், சுருக்க விடைக்களுக்கான கேள்விகள், ஆய்வுகள் போன்ற பல்வகை மதிப்பீட்டுத் தெரிவுகளுக்கு மேலதிகமாக உயர்தர காணொளி, கேட்பொலி, மற்றும் கட்புல மற்றும் அச்சு உள்ளடக்கங்களை கொண்டுள்ள கூகுள் வகுப்பறைகளை அவர்களால் அணுக முடியும்.

- 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த ஆராய்ச்சி கலந்துரையாடல் அமர்வுகளான ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிப்பு (R&R) என்பதன் வெற்றியினை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அடிப்படையாகக் கொண்டதுடன் 2024 ஆம் ஆண்டில் ஐந்து அமர்வுகளை நடாத்தியது. இந்த அமர்வுகள் ஒரு கலப்பு வடிவில் நடைபெற்றன அத்துடன் இதற்காக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் மாணவர்கள், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்கள் மற்றும் ஏனைய பல்கலைக்கழங்களைச் சேர்ந்தவர்களின் அதிக அளவிலான பங்கேற்பு இருந்தது. இலங்கையில் ஆங்கில மொழி மற்றும் இலக்கியம் கற்பித்தல் தொடர்பான பல்வேறு துறைகளில் சமகால ஆராய்ச்சிப் போக்குகளை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதே இந்த அமர்வுகளின் நோக்கமாகும்.

2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அமர்வுகளின் விபரங்கள் பின்வருமாறாகும்

மாதம்	**வளவாளர் / துணை நிறுவனம்**	**முன்வைப்புத் தலைப்பு**
ஜனவரி	திருமதி. ஒசங்கா எச். ரத்னசிறி விரிவுரையாளர் மொழிக் கல்விப்பிரிவு மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	*An exploration of reticence and ambivalence towards speaking English through a tri-lens of ideology, identity, and investment*
பெப்ரவரி	கலாநிதி. அஸ்ரி நூருல் காத்ரி, இணை உலகளாவிய கல்வியாளர் Global Launch அலகு அரிசோனா மாநில பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா	*Documenting Realities of a Multilingual Family with Autism Spectrum Disorders in Using a Behavior Logging App: A Linguistic Ethnographic Case Study*
ஏப்பிறல்	இணைப் பேராசிரியர் மெலிசா இ. ஷிண்ட்லர் ஆங்கில இணைப் பேராசிரியர், வடக்கு ஜோர்ஜியா பல்கலைக்கழகம்	*From the classroom to the cemetery: Innovative approaches to making learning "real"*
ஒகஸ்ட்	பேராசிரியர் ஷாஹித் அப்ரார்-உல்-ஹசன் பேராசிரியர் (ஆங்கில மொழி மற்றும் தொடர்பாடல்), யோர்க்வில் பல்கலைக்கழகம், நியூ வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா வளாகம், பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா	*Language Assessment Literacy for Learner – Centered Instruction*
ஒக்டோபர்	கலாநிதி. கேதகி நாகஹவத்தே ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு கொழும்பு பல்கலைக்கழகம்	*Opportunities and challenges of using stories of experiences in ELT research: Insights from a narrative researcher's journey*

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மீள்கட்டமைக்கப்பட்ட MA TESL நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஐந்தாவது பிரிவுக்கான தெரிவுப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் 05 ஆம் திகதி நடைபெற்றது. 127 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன், அவர்கள் திறந்த பல்கலைக்கழக பரீட்சை மண்டபத்தில் நடைபெற்ற தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றினர். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான அங்குரார்ப்பணமும் பதிவும் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி நடைபெற்றன. 2024/25 பிரிவுக்காக 78 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

இருமொழிக் கல்விப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவின் நான்காவது தொகுதி மாணவ ஆசிரியர்கள் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி நடைபெற்ற அங்குரார்ப்பண விழாவில் வரவேற்கப்பட்டனர். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கும் கல்வி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கல்வி அமைச்சினால் இந்த 50 மாணவ ஆசிரியர்களுக்கும் அனுசரணை வழங்கப்பட்டது.

மேலும், மீளாய்வின் கீழான ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பின்வரும் கல்விசார் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொண்டது.

<u>பொதுவான கல்வி நடவடிக்கைகள்</u>

இந்த ஆண்டின் போது 7 MA Viva - Voce பரீட்சைகள் நடாத்தப்பட்டன. இவற்றுள் 3 பரீட்சைகள் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுகலைமாணிப் பட்ட பாடநெறிகளுக்காகும் என்பதோடு, 4 பரீட்சைகள் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுகலைமாணிப் பட்ட பாடநெறி சார்பிலாகும்.

2024 ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் 110 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நான்கு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உரிய மாணவர்கள் இதில் உள்ளடங்குவர்.

நிர்வாக நடவடிக்கைகளும் முன்முயற்சிகளும்

கோவிட் தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட இடையூறுகளுக்குப் பின்னர், 2024 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிர்வாக மற்றும் கல்விசார் பதவியணியினர் மீண்டும் அலுவலகத்தின் வழக்கமான வேலை நேரத்திற்கு இணங்கி நடவடிக்கை எடுத்தனர்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன சிரேஷ்ட உதவிப் பதிவாளர் 2023.05.02 ஆம் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அவருடைய ஓய்வுக்கால விடுமுறையைப் பெற்றுக்கொண்டதோடு, 2024.04.18 ஆம் திகதியன்று மீண்டும் கடமைக்கு அறிக்கையிட்டார்.

2023 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கை 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையுடன் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான களஞ்சிய மற்றும் நிலையான சொத்துகள் பற்றிய வருடாந்த சரிபார்ப்பும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2023 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2024 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதியன்று உயர்கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட விரிவுரையாளரான தரம் I ஐச் சேர்ந்த கலாநிதி எச்விஜேசேகர .டி . 2024.03.14 ஆம் திகதியன்று பதவி விலகினார். மேலும் ஒரு வெற்றிடம் உள்ளதுடன், இது அவசரமாக நிரப்பப்பட வேண்டும்.

கல்விசாரா பதவியணியில், பதவிநிலைத்தர உத்தியோகத்தர் ஒருவர் சம்பளமற்ற விடுமுறை பெற்று ஐக்கிய இராச்சியத்திற்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளார். துரிதமாக நிரப்பவேண்டிய கல்விசாரா பதவியணியில் இரண்டு வெற்றிடங்கள் (கணனி பயன்பாட்டு உதவியாளர் - 1, அலுவலக உதவியாளர் - 1) நிலவுகின்றமையினால் நிரந்தர பதவியணி உறுப்பினர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் விதிக்கப்பட்ட வரையறைகள் தொடர்ந்து சவால்மிக்கதாகின்றது.

2025.03.01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து அடுத்த மூன்று (03) வருடங்களுக்கு பணிப்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான விசேட முகாமைத்துவ சபையொன்று உள்ளடங்கலாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபை 2024 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களில் கூடியது.

கூட்டங்கள் ஒரு கலப்பு வடிவத்தில் நடத்தப்பட்டதால், சபை உறுப்பினர்களுக்கு இணையவழியில் அல்லது நேரில் கூட்டங்களில் கலந்துகொள்ள விருப்பத்தேர்வு வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்காக, ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல்/ இருமொழிக் கல்வி சார்பான கல்விச் சபையினதும் இரண்டாம் மொழிச் சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல்/ ஆங்கில மொழியைத் தொழில்ரீதியாகக் கையாளல் சார்பான கல்விச் சபையினதும் 10 கூட்டங்கள் நடைபெற்றன.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திலுள்ள பெரும்பாலான செயல்முறைகள் இன்னமும் கைமுறையாக செய்யப்படுவதால், இந்நிறுவனத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) மிகவும் அவசியமாக உள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நேரும் அதிக செலவைக் கருத்திற்கொண்டு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதைய வலைத்தளத்தை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தவும், ஆரம்ப கட்டமாக இணையதளம் மூலம் பணம் செலுத்தும் சாளரத்தை அறிமுகப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2025 ஆம் ஆண்டில் இயங்கு ஆற்றல்மிக்க புதிய இணையத்தளத்தை தொடங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நிதி

இந்த அறிக்கையில் வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளபடி, 2024 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு அரச நிதியீட்டத்தில் 13% ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

நிதிச் செயற்றிறன் கூற்று

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	குறிப்பு	2024	2023 (மீளாய்வு செய்யப் பட்டவை)	2023
		ரூபா	ரூபா	ரூபா
வருமானம்				
நடைமுறை				
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*				
அரசாங்க மீண்டுவரும் கொடை		5,820,000	3,750,000	3,750,000
நானாவித பெறுவனவுகள்		635,792	141,228	141,228
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான மொத்த வருமானம் - *நடைமுறை*		**6,455,792**	**3,891,228**	**3,891,228**
பரிமாற்றம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*				
விண்ணப்பக் கட்டணம்		518,000	397,000	397,000
பதிவுக் கட்டணம்		585,100	464,900	464,900
கல்வி கட்டணம்		10,525,226	13,595,455	13,595,455
பரீட்சைக் கட்டணம்		1,693,465	844,315	844,315
குறைநிரப்புக் கட்டணம்		324,800	314,200	314,200
ஆய்வுக் கட்டுரைக் கட்டணம்		1,959,500	1,526,800	1,526,800
மாணவர் கற்றல்சார் கட்டணம்		42,500		
கற்பித்தல் பயிற்சிக் கட்டணம்		1,320,014		
குறுகிய காலப் பாடநெறிக் கட்டணம்		2,569,848	983,336	983,336
வட்டி வருமானம்	**14**	9,798,336	17,888,886	17,909,042
கல்விச் சான்றுறுதி, சான்றிதழ் கட்டணம்		107,300		
சர்வதேச மாநாடு		763,420		
மூலதனக் கொடையின் இலதாக்கல்			-	8,735,280
பரிமாற்றம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*		**30,207,509**	**36,014,892**	**44,770,328**

மொத்த வருமானம் - *மீண்டுவரும்*		**36,663,301**	**39,906,120**	**48,661,556**
மூலதனம்				
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - மூலதனம்				
புனர்நிர்மாணத்திற்கான அரசாங்க கொடை - மீண்டுவரும்		-		
அன்பளிப்பு, நன்கொடை – உள்நாடு மற்றும் வெளிநாடு		-		
மொத்த வருமானம் – மூலதனம்		-	-	-
மொத்த வருமானம்		**36,663,301**	**39,906,120**	**48,661,556**
செலவுகள்				
நடைமுறை				
தனியாள் வேதனாதிகள்	**15**	34,256,958	36,011,727	36,011,727
பயணச் செலவுகள்	**16**	149,477	173,988	173,988
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	**17**	609,493	753,288	753,288
பராமரிப்புச் செலவுகள்	**18**	1,200,489	583,886	583,886
ஒப்பந்தச் சேவைகள்	**19**	1,032,292	956,610	956,610
பிற மீண்டுவரும் செலவுகள்	**20**	5,648,632	7,085,241	7,085,241
பணிக்கொடை செலவுகள்		1,529,519	668,746	2,597,195
மனித மூலதனச் செலவுகள்				
மறுபடி விலைமதிப்புப் பற்றாக்குறை				
மொத்தச் செலவுகள் (மூலதனம் சாராத தன்மை)		**44,426,859**	**46,233,486**	**48,161,935**
மூலதனம்				
பெறுமானத் தேய்வு		9,280,633	8,967,152	8,967,152
இலதாக்கல் – அருவச் சொத்துக்கள்		118,000	118,000	118,000
மொத்தச் செலவுகள் (மூலதனம்சார் தன்மை)		**9,398,633**	**9,085,152**	**9,085,152**
மொத்தச் செலவுகள்		**53,825,492**	**55,318,638**	**57,247,087**
ஆண்டுக்கான மிகை/ பற்றாக்குறை		**(17,162,191)**	**(15,412,517)**	**(8,585,530)**
ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை) – நடைமுறை		(7,763,558)	(6,327,365)	(8,585,530)
ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை) - மூலதனம்		(9,398,633)	(9,085,152)	
		(17,162,191)	**(15,412,517)**	**(8,585,530)**

(இ) சவால்கள்

2024 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் எதிர்கொண்ட மிகக் கடுமையான சவால் நிதியீட்டம் தொடர்பானதாகும். அரசாங்கத்தின் நிதியீட்ட ஆதரவு படிப்படியாக குறைந்து வந்தாலும், 2024 ஆம் ஆண்டில், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் மற்றும் பல பட்டப்பின் படிப்பு நிறுவனங்களுக்கான அரசாங்கத்தின் நிதி கிட்டத்தட்ட 87% ஆல் குறைக்கப்பட்டது. இது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2024 ஆம் ஆண்டில் பற்றாக்குறையினைப் பதிவு செய்வதற்கு வழிவகுத்தது.

தற்போதுள்ள கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினர்களின் வெற்றிடங்களை நிரப்ப ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு அனுமதிக்கப்படாமை என்பது மற்றொரு சவாலாகும். ஒரு நிறுவனம் ஒப்பந்த மற்றும் வெளிவாரி பதவியணியினர்களில் முழுமையாக தங்கியிருக்கும் போது, நிலையான மற்றும் நிலைத்துநிற்கும் முறைமைகள் நடைமுறையில் இருப்பதை உறுதிசெய்வது ஒரு சவாலாகும். இந்த பதவியணி உறுப்பினர்களுக்கு செலுத்தப்படக்கூடிய சம்பளங்களானவை பரீட்சார்த்திகள் கொண்டுள்ள தகைமைகளுக்கு தற்போதைய சந்தையிலுள்ள சம்பளங்களை விடக் குறைவாக இருப்பதால் பதவியணியினர் நிறுவனத்தை விட்டு அதிகமாக வெளியேறும் தன்மை காணப்படுகின்றது, இது நிறுவனத்திற்கு சாதகமற்றதாகும்.

அரசாங்கத்தின் இந்த நிதி மற்றும் மனித வள முடிவுகளின் விளைவுகள் எதிர்மறையானவையாகும். அவர்களுடைய எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மையால், நிரந்தரப் கல்வி மற்றும் கல்வி சாரா பதவியணியினர்கள் திருப்தியற்ற நிலையிலுள்ளனர். இந்த நிச்சயமற்ற தன்மைக்கு முகங்கொடுப்பதற்கு எதிர்கால பரீட்சார்த்திகள் தயங்குவர் என்பதால் நிரந்தர அடிப்படையில் உயர் தரமான கல்வியாளர்களை ஈர்ப்பது நிறுவனத்திற்கு கடினமாகியுள்ளது.

மறுபுறம், வழங்கப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தற்போதுள்ள பாடநெறிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தற்போதுள்ள பதவியணியினர்கள் தொடர் அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். சிறிய எண்ணிக்கையிலான

கல்வியாளர்களைக் கருத்திற்கொள்கையில், தரத்தைக் குறைக்காமல் இதைச் செய்வது எளிதான ஒன்றல்ல.

மக்கள் எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமும் மாணவர்களிடம் அறவிடப்படும் கட்டணத்தை (வழமையான ஆண்டு அதிகரிப்பைத் தவிர) அதிகரிப்பதற்கு பின்னிற்கின்றது. நாட்டின் பரந்த செயல்பாடுகளில் எங்கள் பங்கை நாங்கள் அறிந்திருக்கிறோம், எனவே எங்கள் கல்விக்கான அணுகலை முடிந்தவரை ஏற்கக்கூடிய மட்டத்தில் பேணுவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

(ஈ) எதிர்காலத் திட்டங்கள்

தற்போது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் எதிர்கொள்ளும் நிதிக் கட்டுப்பாடுகள் இருந்தாலும், அதன் முறைமைகளில் தேவையான மாற்றங்களைச் செய்யாமல், நிறுவனம் தனது மாணவர்களுக்கு விரைவான, துல்லியமான மற்றும் நிலையான வழியில் ஒத்தாசை நல்க முடியாதென்பது மென்மேலும் தெளிவாகிறது. எனவே, எதிர்காலத்தில் ஒரு நவீன முகாமைத்துவ தகவல் முறைமையில் (MIS) முதலீடு செய்வது நிறுவனத்திற்கு இன்றியமையாததாகும்.

மேலும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது, ஆங்கில மொழி கற்பித்தல்/ இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் சந்தையிலுள்ள சமகால தேவைகளைப் பூர்த்தி செய்யும் பாடநெறிகளை வடிவமைப்பதன் மூலம் நிறுவனம் வழங்கும் குறுகிய கால பாடநெறிகளின் தொகுதியைச் சேர்க்க எதிர்பார்க்கின்றது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் போன்ற சர்வதேச ஆங்கில மொழி கற்பித்தல் சேவை வழங்குநர்களுடன் இணைந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை வழங்குவதற்கான வழிகளை ஆய்வு செய்ய நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

2024 ஆம் ஆண்டில் ஆராய்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் எதிர்பார்க்கும் மற்றுமொரு தெரிவு என்னவெனில், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின்

முதுகலைமாணி மற்றும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளுக்கு பதிவுசெய்ய வெளிநாட்டிலிருந்து மாணவர்களை அழைப்பதற்கான சாத்தியக்கூறாகும். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் வழங்கும் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டங்களில் மாலைதீவு மாணவ - ஆசிரியர்களை சேர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுகின்றமை பற்றி இனங்காணப்பட்டுள்ளதோடு, இந்தச் சாத்தியக்கூறு பற்றி எதிர்வரும் ஆண்டில் மேலும் ஆராயப்படும்.

(உ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் மாணவர்களின் விபரங்களும்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவான வகைப்படுத்தலும் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் உட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் புள்ளிவிபரங்களும் பின்வருமாறாகும்.

முழுநேர நிகழ்ச்சித்திட்டங்கள்

அ. ஆராய்ச்சி மூலமான பட்டப்பின் பட்டங்கள்

1. தத்துவக் கலாநிதி
2. தத்துவ முதுமாணி

ஆ. பாடநெறிகள் மற்றும் ஆராய்ச்சி பிரிவும் சேர்ந்த பட்டப்பின் படிப்பு பட்டங்கள்

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுகலை மாணி பட்டம்.
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுகலை மாணி பட்டம்

இ. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
3. இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
4. ஆங்கில மொழியினை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

நிகழ்ச்சித்திட்டம்	மொத்த மாணவர்கள்
தத்துவக் கலாநிதி	2
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுகலை மாணி பட்டம் (MA in TESL)	47
இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிப்பதில் முதுமாணி (M in TESL)	26
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா / முதுகலைமாணி (PG Dip/MA in TESL) - புதியது	120
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா / முதுகலைமாணி (PG Dip/MA in TESL) - பழையது	35
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுகலை மாணி பட்டம் (MA in TLSC)	47
இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDip. in BE)	56
ஆங்கில மொழியினை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	-
கல்விசார் எழுத்து பற்றிய குறுங்காலப் பாடநெறி	47
Chrysaly சார்பில் தொழில்சார் தொடர்பாடல் பற்றிய குறுங்காலப் பாடநெறி	24
கல்விசார் எழுத்தறிவு மற்றும் உள்ளடக்கம் மற்றும் மொழி ஒன்றிணைந்த கற்றல் பற்றிய குறுங்காலப் பாடநெறி (CLIL)	18
மொத்தம்	**422**

கல்வி ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்துள்ள மாணவர்களின் விபரம்

பாடநெறி	உள்வாங்கல் 2023	1 ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி I)	2 ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி II)	பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை
தத்துவ முதுமாணி/ தத்துவக் கலாநிதிப் பட்டம்	-	-	02	-
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா / முதுகலை மாணிப் பட்டம்.	59	128	95	PGDip – 13 MTESL – 15 MA in TESL – 15
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான முதுகலை மாணிப் பட்டம்	23	52	38	PGDip – 20 MA in TLSC – 0
இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	-	44	8	PGDip – 37
ஆங்கிலமொழியை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	43	2	-	PGDip – 25
மொத்தம் **05**	**125**	**226**	**143**	**PGDip – 95** **M – 15** **MA – 15**

தமக்குள்ள பணிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு பாடநெறிகளை தெரிவுசெய்வதற்கான வசதிகள் அளிக்கப்படுகின்ற திறந்த மற்றும் தொலைநோக்கு கற்றல் வடிவத்தை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பயன்படுத்துகின்றது. ஆதலால், நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஆகக்கூடுதலாக ஆறு (06) அல்லது ஏழு (07) வருடங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

மாணவர் செயலாற்றுகை

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களில் பாடநெறி வாரியான மாணவர் செயற்றிறனின் ஒரு வகைப்படுத்தல் கீழே தரப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது கலப்பு (தொலைதூர மற்றும் நேரடியான) கல்வி முறைகளைப் பின்பற்றுகின்றமையால் நிகழ்ச்சித் திட்டமொன்றை நிறைவுசெய்வதற்கு மாணவர்களுக்குப் பதிவுத் திகதியிலிருந்து 06 வருடங்கள் வரை எடுக்கலாம். இது தொலைதூர கல்வி முறைமையொன்றின் உள்ளார்ந்தமான நெகிழ்வுத்தன்மையின் பகுதியாகும். ஆதலால், மாணவர் பட்டம்பெறும் எண்ணிக்கையைக் காட்டிலும், அவர்கள் உண்மையாகப் பதிவுசெய்துள்ள கற்கைநெறிகளை நிறைவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையானது மாணவர் (மற்றும் நிறுவன ரீதியான) செயற்றிறனின் அதிசிறந்த குறிகாட்டி ஆகும்.

கற்பவருக்கான ஆதரவு

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் தமது பிரேரிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாகும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு இணையவழி ஊடான மதியுரைக் கருத்துகளையும் பின்னூட்டலையும் வழங்கியது. இது ஒரு காலச் செறிவான செயற்பாடொன்றாகும். அதேபோன்று இரு வேறுபட்ட முதுகலைமாணி நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமாக பின்பற்ற வேண்டியுள்ளமையினால் கூடுதல் கவனத்தைச் செலுத்தி உயர் தரமான பிரேரிப்புக்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு உதவுவதில் இது வெற்றிகரமான மூலோபாயமொன்றாக இருப்பதை நிரூபித்துள்ளது.

(ஊ) மீளாய்வு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள்

முழுநேரக் கற்கைநெறிகள் மற்றும் குறுகியகாலக் கற்கைநெறிகள் நீங்கலாக, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. செயற்பாட்டின் சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- கலப்பு முறைக்கு வசதிகளை செய்வதற்கு இருமொழிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவின் கற்பித்தல் செயல்முறை கட்டம் 1 கூறினை மீளமைத்தல்.

- கடுமையாக ஆலோசனை வழங்கப்பட்ட மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட இணையவழி கற்பித்தல் பயிற்சிக்கு வசதிகளைச் செய்வதற்காக இருமொழிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவின் கற்பித்தல் செயல்முறை கட்டம் 2 கூறினை மீளமைத்தல்.

- காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை செயற்பாடு தொடர்பில் திரு. அர்த்தா சல்காது அவர்களினால் விருந்தினர் உரை ஆற்றப்பட்டது. அவருடைய உரையில் காலநிலை பிரச்சினைகள் தொடர்பான கண்ணோட்டம், பாரிஸ் உடன்படிக்கைக்கான கடப்பாடுகள் மற்றும் உலகு குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு நிலைமாறுவதால் ஏற்றுமதி சந்தைக்கு உள்ள இடர் மற்றும் வாய்ப்புகள் தொடர்பிலான கலந்துரையாடல் என்பன முன்வைக்கப்பட்டன. இது பார்வையாளர்கள் பெரிய அளவில் கலந்துகொண்டு அறிவுபெற்ற கலப்பு நிகழ்ச்சியொன்றாகும். ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு பெறுமதி சேர்க்கும் விதத்தில் இவ்வுரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(எ) **மனித வளங்கள்**

தற்போது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது பின்வரும் மனிதவளங்களை கொண்டுள்ளது,

மொத்த நிரந்தர பதவியணி வலு - 14

- உண்மையான ஆளணி - 10 & ஒப்பந்த பதவியணி - 05
- வெற்றிடங்கள் - 04

கல்விசார் பதவியணி பற்றிய விபரங்கள்

நிறுவனம்	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	தகுதிகூர் கால விரிவுரையாளர்	விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் (ஒப்பந்தம்)
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்	ஆங்கிலம்	-	-	03	-	-	02*
மொத்தம்	**-**	**-**	**-**	**03**	**-**	**-**	**02**

* ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்

கல்விசாரா பதவியணி பற்றிய விபரங்கள்

நிறுவனம்	மிகச் சிரேஷ்ட	சிரேஷ்ட பதவியணி	கனிஷ்ட பதவியணி	சிற்றூழியர்கள்	ஒப்பந்த பதவியணி
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்	-	02	03	01	03
மொத்தம்	**-**	**02**	**03**	**01**	**03**

(ஏ) பதவியணியினரின் ஆய்வுகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம்

1. ***கலாநிதி ரொமொலா ரசூல் - பணிப்பாளர்*** - PhD (அவுஸ்திரேலியா)

தேசிய மட்ட பங்களிப்புகள்:

- இலங்கை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்.
- துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள ஐக்கிய அமெரிக்காவின் ஹொலிங்ஸ் நிலையத்தினால் (Hollings Center) ஏற்பாடு செய்யப்பட்ட தெற்காசிய உயர்கல்வி கருத்தரங்கில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.
- கல்வி அமைச்சின் இருமொழிக் கல்விப் பிரிவுக்காக சில பயிற்றுவிப்பாளர் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தினார்.

முன்னளிப்புகள்/ செயலமர்வுகள்

- திறந்த பல்கலைக்கழக ஆராய்ச்சி கருத்தரங்கு 2024 இற்கான ஒரு மாநாட்டிற்கு முன்னரான செயலமர்வை நடாத்தினார்.
- கொழும்புப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட மொழி கற்பித்தல்“, ஆராய்ச்சி மற்றும் கொள்கை என்ற ”கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் முன்னோக்கிய பாதை : தலைப்பிலான சர்வதேச செயலமர்வில் அழைக்கப்பட்ட பேச்சாளராகக் கலந்து கொண்டார்.
- இலங்கை ஆங்கில மொழி ஆசிரியர் கல்வியாளர் மாநாட்டில்)SLELTEC) வசதிப்படுத்துநராகவும் குழு உறுப்பினராகவும் செயற்பட்டார்.
- திறந்த பல்கலைக்கழக ஆராய்ச்சி செயலமர்வு)OURS) 2024 இல் ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான கல்வி அமர்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

விருதுகள்:

- அமெரிக்கஇலங்கை புல்பிரைட்- (Fulbright) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் புல்பிரைட் முன்னாள் மாணவர் சிறு கொடையினை வென்றார்.

ஆராய்ச்சி தொடர்பான நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பு:

- ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மொழிகள், இலக்கியங்கள் மற்றும் மொழியியல் 2024 பற்றிய சர்வதேச மாநாட்டின் ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவர்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பரீட்சித்தல்:

- ஜப்பானின் ஹிரோஷிமா நகரப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திருமதி உடும்பர சமரக்கோனின் கலாநிதிப் பட்ட ஆய்வுக் கட்டுரையின் வெளிவாரிப் பரீட்சகராகப் பணியாற்றினார்.
- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதுகலைமாணி (MA) ஆய்வுக் கட்டுரையின் பரீட்சகராகப் பணியாற்றினார்.

ஆய்வுச்சுருக்கங்கள்/ஆக்கங்களை மீளாய்வு செய்தல்:

- *ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய வித்யோதயா சஞ்சிகைக்கான சஞ்சிகை ஆக்கத்தை மீளாய்வு செய்தார்.*
- *களனிப் பல்கலைக்கழகத்தின் கல்யாணி சஞ்சிகைக்கான சஞ்சிகை ஆக்கத்தை மீளாய்வு செய்தார்.*
- *இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சஞ்சிகைக்கான ஆக்கத்தை மீளாய்வு செய்தார்.*
- *களனிப் பல்கலைக்கழகத்தின் பல்துறைசார் மற்றும் மொழிபெயர்ப்புசார் சஞ்சிகைக்கான (JMTR) ஆக்கத்தை மீளாய்வு செய்தார்.*
- OURS *மாநாட்டுப் புத்தகத்திற்கான ஆய்வுச் சுருக்கங்களை மீளாய்வு செய்தார்.*
- SLELTEC 2024 *இற்கான ஆய்வுச் சுருக்கங்களை மீளாய்வு செய்ததுடன், ஆய்வுச் சுருக்க மீளாய்வுச் செய்முறையை ஒருங்கிணைத்தார்.*

2. திருமதி எம்.ஐ.ஜான்ஸ் - சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II - *MPhil (களனி)*
வெளியீடுகள்

B.R. Schrieber, 'Global Englishes-oriented teacher education: lasting shifts. ELT Journal, "ELT Journal. Volume 79, Issue 1, January 2025, Pages 35–43, https://doi.org/10.1093/elt/ccae027

மாநாடுகளின் சுருக்க மீளாய்வு

1. iConArts2024
2. IRCHSS25
3. ICLLL24
4. IRCOUSL2024
5. SLELTEC24

சபை நடுநிலையாளர்

DELT UOC *ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட மொழி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கொள்கை: கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் முன்னோக்கிய பாதை தொடர்பான சர்வதேச செயலமர்வு*

தேசிய கல்விசார் பங்களிப்பு

1. இலங்கை திறந்த பல்கலைக்கழக சஞ்சிகை ஆசிரியர் சபை

2. உறுப்பினர்- ஆராய்ச்சி விருதுகள் மூதவை உப குழு நெறிமுறைகள் மீளாய்வு (OUSL)

1. குழு உறுப்பினர் - கைத்தொழில் தொடர்பு

2. ஆலோசனை சபை உறுப்பினர் மற்றும் ஆய்வுக் கட்டுரை மீளாய்வு – TESOL சஞ்சிகை

3. பொருளாளர் - SLACLALS

4. வருகைதரும் கல்வியாளர் - SEUSL, களனி பல்கலைக்கழகம்

5. கூட்ட அழைப்பாளர் – ஒழுங்கமைப்புக் குழு - ICLLL24

3. **கலாநிதி அக்ரா ராஜபக்ஷ - சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II -** *PhD (Arizona State பல்கலைக்கழகம்)*

வெளியீடுகள்

Warriner, D. ,S., Griego and A. Rajapakse, 'Multilingual literacies: Routledge Handbook of Multilingualism,p.160-175, Routledge Handbook Series.

மாநாடுகளின் சுருக்க மீளாய்வு

1.ICLLL24

2.IRCOUSL2024

3.SLELTEC24

சபை நடுநிலையாளர்

DELT UOC ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட மொழி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கொள்கை: கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் முன்னோக்கிய பாதை தொடர்பான சர்வதேச செயலமர்வு.

தேசிய கல்விசார் பங்களிப்பு

1. இலங்கை திறந்த பல்கலைக்கழக சஞ்சிகை – கையெழுத்துப் பிரதி மீளாய்வு

2. ERC OUSL இன் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன நெறிமுறைகள் மீளாய்வு உப குழு உறுப்பினர்

3. சிறந்த ஆராய்ச்சியாளர் விருது - OUSL

4. நிலைபேறான அபிவிருத்தியின் எதிர்கால எதிர்பார்ப்புகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் பணிகளுக்கு நேரடியாகப் பொருத்தமானவையாக அடையாளம் கண்டுள்ளது:

குறிக்கோள் 4 – தரமான கல்வி

குறிக்கோள் 16 – சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிகள் இவ்விரு குறிக்கோள்களுடனும் சீரமைந்துள்ள மற்றும் அவற்றுக்குப் பங்களித்துள்ள திட்டவட்டமான வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

<u>குறிக்கோள் 4 – தரமான கல்வி</u>

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணியானது குறிக்கோள் 4 இன் கீழுள்ள பின்வரும் இலக்குகளை நிவர்த்தி செய்கிறது:

1. 2030 ஆம் ஆண்டளவில், வேலைவாய்ப்பு, கண்ணியமான தொழில்கள் மற்றும் முயற்சியாண்மை ஆகியவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் திறன்கள் உள்ளிட்ட பொருத்தமான திறன்களைக் கொண்ட இளையோர்கள் மற்றும் பெரியவர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்தல்.
2. 2030 ஆம் ஆண்டளவில், கல்வியில் பால்நிலைப் பாகுபாடுகளை அகற்றி, மாற்றுத்திறனாளிகள், சுதேச மக்கள் மற்றும் நலிவுறக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள பிள்ளைகள் உட்பட நலிவுறக்கூடியவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் பயிற்சி மட்டங்கள் அனைத்திற்குமான சமமான அணுகலை உறுதிசெய்தல்.
3. 2030 ஆம் ஆண்டளவில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில், குறிப்பாக குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் சிறிய தீவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் ஆகியவற்றில் ஆசிரியர் பயிற்சிக்கான சர்வதேச ஒத்துழைப்பு மூலம், தகைமை வாய்ந்த ஆசிரியர்களின் ஏற்பாட்டை கணிசமாக அதிகரித்தல்.

இந்த இலக்குகளுக்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் பங்களித்துள்ளது எவ்வாறு என்பது பற்றியது:

1. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதுள்ள இரண்டு முதுகலைமாணி (MA) நிகழ்ச்சித் திட்டங்கள்: இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தலில் முதுகலைமாணி (MA TESL) மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தலில் முதுகலைமாணி (MA TLSC) மூலம் இலக்குகள் 1 மற்றும் 3 என்பன நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

    இலங்கையிலுள்ள அரச, தனியார் மற்றும் பகுதியளவு தனியார் கல்வித் துறைகளைச் சேர்ந்த ஆசிரியர்களே இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களினதும் முதன்மை இலக்குக் குழுவாகும். சில மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர் அத்துடன் ஏனையோர், பதவி உயர்வுகள் மற்றும் வெளிநாடுகளில் மேலதிக பட்டப்பின் படிப்புகளுக்காக விண்ணப்பித்தல் போன்ற தொழில்சார் முன்னேற்றத்திற்காக இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

    ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் கல்வியின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் மேலும் மேம்படுத்தும் பொருட்டு, 2020 ஆம் ஆண்டில் அதன் இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தலில் முதுகலைமாணி (MA TESL) நிகழ்ச்சித்திட்டத்தை மீளமைத்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் சேரும் ஆசிரியர்கள், ஓர் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தில் அவசியமாக ஈடுபடாமல், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா (PGDip TESL) அல்லது இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பித்தலில் முதுமாணி (MTESL) தகைமையுடன் வெளியேற முடியும் என்பதால் இது அவர்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்கும்.

2. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இரண்டு புதிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கியது. இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் இந்நாட்டில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்கு நேரடியாகப் பங்களிக்கின்றன.

இருமொழிக் கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDip BE) என்பது இலங்கையின் ஒரேயொரு இருமொழிக் கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும் என்பதுடன் ஆங்கிலத்திலும் தமது தாய்மொழியிலும் உள்ளடக்கப் பாடங்களைக் கற்பிக்கக்கூடிய புதிய தலைமுறை ஆசிரியர்களை உருவாக்குவதற்கு உள்ளடக்க மொழி ஒன்றிணைந்த கற்றல்)CLIL) முறைமையைப் பயன்படுத்துகின்றது. இது மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும்.

ஆங்கில மொழியை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா)PGDip PPE) என்பது ஆங்கிலத்திற்கான தொடர்பாடல் அடிப்படையிலான அணுகுமுறையை வழங்குகிறது அத்துடன் இலாபகரமான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், சமூகத்தின் ஆக்கபூர்வமான பிரசைகளாக ஆகுவதற்குமென வேலை தேடும் இளையோர்களும், ஆரம்ப தொழிற்றுறை நிபுணர்களும் ஆங்கில அடிப்படையிலான தொடர்பாடல் திறன்களைக் கொண்டிருப்பதை வலுவூட்டுதல் நோக்கிய இலக்கினைக் கொண்டுள்ளது.

குறிக்கோள் 16 – சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்

1. வன்முறையைத் தடுப்பதற்கும் பயங்கரவாதம் மற்றும் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அனைத்து மட்டங்களிலும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்காக, சர்வதேச ஒத்துழைப்பு உட்பட, உரிய தேசிய நிறுவனங்களை வலுப்படுத்தல்.
2. நிலைபேறான அபிவிருத்திக்காக பாரபட்சமற்ற சட்டங்களையும் கொள்கைகளையும் ஊக்குவித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து கலை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆராய்ச்சி மானியத்தைப் பெற்று 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலக்குகள் 1 மற்றும் 2 இற்கு பங்களித்துள்ளது. இது, பெல்பாஸ்டில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய பாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கான மூதவை உறுப்பினர் ஜோர்ஜ் ஜே மிட்செல் நிறுவனத்துடன் (Senator George J Mitchell Institute for Global Security and Peace) ஓர் இணைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. நிலைமை ஒப்பீட்டளவில் இயல்பு நிலையை அடைந்து நல்ல நிதி உறுதிப்பாட்டுடன் இருக்கும் போது 2025 ஆம் ஆண்டு முதல் மேலதிக விருப்பத் தெரிவுகளை ஆராய்வதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கணக்காய்வுக் குழு அறிக்கை

உள்ளகக் கணக்காய்வு அறிக்கை

மீளாய்வு ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினதும் (OUSL) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினதும் (PGIE) உரிய துறைகளை தழுவி அதன் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

1. **முற்கணக்காய்வுகள்**

- பல்கலைக்கழக சேமலாப நிதியத்தை (UPF) விடுவித்தல்
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதிய நிதியத்தை விடுவித்தல்
- ஒப்பந்தங்கள் தொடர்பான இறுதிக் கொடுப்பனவுகளும் பிடித்துவைத்தல் பணத்தை விடுவித்தலும்.

2. **முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள்**

1. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிரந்தர மற்றும் தற்காலிக பதவியணியினரின் தனிப்பட்ட கோவை தொடர்பிலான கணக்காய்வு விசாரணை - 2022/2023 - VV/19/AQ/2023/PGIE/01

2. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை - 2022/2023 - VV/19/AQ/2023/PGIE/02

3. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு சார்பில் பதிவுசெய்யப்பட்ட ஜேர்னல் பதிவுகள் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை - VV/19/AQ/2023/PGIE/03

4. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான வங்கி கணக்குகள் மற்றும் வங்கி ஒப்பீட்டு கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை - VV/19/AQ/2023/PGIE/04

3. **கணக்காய்வுக் குழு**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் பொருட்டு இரு மாதங்களுக்கு ஒருமுறையேனும் இந்த நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு கூடுகின்றது. கணக்காய்வாளர் அதிபதியினாலும் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் அனுப்பிவைக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகளையும் ஐயவினாக்களையும், மற்றும் உள்ளக கணக்காய்வினையும் அத்துடன் அவ் ஐயவினாக்களுக்கு இந்த நிறுவனத்தின் பதிலிறுப்புக்களையும் இக்குழு கருத்திற்கொள்கின்றது. இக்குழு சிபாரிசுகளைச் செய்வதுடன் திருத்த நடவடிக்கைக்கான பணிப்புக்களும் கண்காணிக்கப்படுகின்றன.

மீளாய்வின் கீழான ஆண்டின் போது நான்கு (04) தடவைகள் இக்கணக்காய்வுக் குழு கூடியுள்ளது.

4. பணியாட்டொகுதி

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது பின்வரும் பணியாட்டொகுதியினரைக் கொண்டுள்ளது -

- சிரேட்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர்
- உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர்.
- கணக்காய்வு உதவியாளர்கள் ஐவர்
- கருத்திட்ட உதவியாளர் ஒருவர்
- செயற்பாட்டு உதவியாளர் ஒருவர்

PGIE
POST GRADUATE INSTITUTE OF ENGLISH

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

நிதி நிலைமை பற்றிய அறிக்கை
2024

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2024 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதி நிலமைக் கூற்று

	குறிப்பு	2024 ரூபா	2023 (மீளாய்வு செய்யப் பட்டவை) ரூபா	2023 ரூபா
சொத்துக்கள்				
நடைமுறைச் சொத்துக்கள்				
வங்கியிலுள்ள பணம்	1	9,286,058	4,275,427	4,275,427
பதவியணியினருக்கான கடன் மற்றும் முற்பணம்	2	270,010	270,010	1,143,672
மாணவர்களிடமிருந்து வரவேண்டியவை	3	667,410	209,682	1,327,867
குறுகியகால முதலீடு	4	94,345,626	101,831,800	101,851,956
இருப்புகள்		502,171	568,653	464,112
முற்கொடுப்பனவுகளும் வரவேண்டியவைகளும்	5	69,924	79,553	79,553
அகற்றலுக்காக வைத்திருக்கப்படும் நடைமுறை சாரா சொத்துக்கள்		10,800		
நிலையான வைப்பிலிருந்தான வருமதி வட்டி		39,926	76,383	76,175
		105,191,925	**107,311,508**	**109,218,762**
நடைமுறை சாரா சொத்துக்கள்				
பதவியணியினருக்கான கடன் மற்றும் முற்பணம்	2	601,652	873,662	
மாணவர்களிடமிருந்து வரவேண்டியவை	3	1,111,503	1,118,185	
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	6	64,423,341	73,617,137	73,473,771
கட்புலனாகா சொத்துக்கள்	7	236,000	354,000	354,000
பதவியணி காப்புறுதி வைப்பு		500,000	500,000	500,000
வைப்பு வருமதி		95,694	95,694	
நன்கொடை நிதிய முதலீடு		650,000	650,000	650,000
		67,618,190	**77,208,678**	**74,977,771**
மொத்த சொத்துக்கள்		**172,810,116**	**184,520,186**	**184,196,533**

உரிமை முதலும் பொறுப்புகளும்				
நடைமுறை பொறுப்புக்கள்				
அட்டுறு செலவுகள்	8	2,878,404	2,792,331	2,792,331
நானாவித கடன்கொடுநர்கள்	9	810,669	195,713	121,810
முன்னதாகவே செலுத்தப்பட்ட மாணவர் கட்டணம்	10	12,518,866	6,632,032	6,632,032
முன்னதாகவே செலுத்தப்பட்ட பட்டமளிப்பு விழாக் கட்டணம்		78,000		
நிர்மாணிப்பின் மீதான பிடித்துவைத்தல் தொகை		158,859	158,859	158,859
முற்பண வட்டி		-	832,118	832,118
வங்கியிலுள்ள பணம்			-	
		16,444,798	10,611,053	10,537,150
நடைமுறைசாரா பொறுப்புகள்				
பணிக் கொடைக்கான நிதி ஏற்பாடுகள்	11	6,034,845	6,039,182	7,967,631
மொத்தப் பொறுப்புக்கள்		22,479,643	16,650,235	18,504,781
தேறிய சொத்துக்கள்		150,330,473	167,869,952	165,691,753
தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்				
திரண்ட நிதியம்				
மூலதன கொடை - செலவு செய்யப்பட்டவை	12	-	-	59,045,158
திரண்ட நிதியம் – மீண்டெழல்		80,859,360	88,771,802	86,465,267
திரண்ட நிதியம் – மூலதனம்	13	49,468,192	58,769,189	
மதிப்பீட்டு ஒதுக்கம்		14,716,266	14,716,266	14,716,266

மொத்த திரண்ட நிதியம்	**145,043,819**	**162,257,257**	**160,226,691**
ஒதுக்குகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்			
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அபிவிருத்தி நிதியம்	4,179,194	4,547,616	4,547,616
நன்கொடை நிதியம்	845,684	797,633	650,000
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் காப்புறுதி நிதியம்	261,776	267,446	267,446
மொத்த ஒதுக்குகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்	**5,286,654**	**5,612,695**	**5,465,061**
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்	**150,330,473**	**167,869,952**	**165,691,753**

பக்க இலக்கம் (5) இலிருந்து (7) வரை குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 8 இலிருந்து 16 வரையிலுள்ள குறிப்புகள் என்பன இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல், முன்வைத்தல் என்பன தொடர்பில் முகாமைத்துவ சபையானது பொறுப்புக் கூறும். இந்த முகாமைத்துவ சபையினால் இந்த நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டதோடு, சபை சார்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கலாநிதி ஏ.ஆர் ரசூல்	கலாநிதி ஆர்.எல்.ஏ.எஸ். ராஜபக்ஷ	கலாநிதி எஸ்.ஏ.ஏ.கே. சத்தரசிங்ஹ	டபிள்யூ.டி.ரீ. திலகரத்ன	ஜீ.ஏச். காமினி
பணிப்பாளர்	முகாமைத்துவ சபை உறுப்பினர்	முகாமைத்துவ சபை உறுப்பினர்	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	உதவி நிதிப் பொறுப்பாளர்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

நிதிச் செயற்றிறன் கூற்று

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	குறிப்பு	2024	2023 (மீளாய்வு செய்யப் பட்டவை)	2023
		ரூபா	ரூபா	ரூபா
வருமானம்				
நடைமுறை				
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*				
அரசாங்க மீண்டுவரும் கொடை		5,820,000	3,750,000	3,750,000
நானாவித பெறுவனவுகள்		635,792	141,228	141,228
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான மொத்த வருமானம் - *நடைமுறை*		**6,455,792**	**3,891,228**	**3,891,228**
பரிமாற்றம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*				
விண்ணப்பக் கட்டணம்		518,000	397,000	397,000
பதிவுக் கட்டணம்		585,100	464,900	464,900
கல்வி கட்டணம்		10,525,226	13,595,455	13,595,455
பரீட்சைக் கட்டணம்		1,693,465	844,315	844,315

குறைநிரப்புக் கட்டணம்		324,800	314,200	314,200
ஆய்வுக் கட்டுரைக் கட்டணம்		1,959,500	1,526,800	1,526,800
மாணவர் கற்றல்சார் கட்டணம்		42,500		
கற்பித்தல் பயிற்சிக் கட்டணம்		1,320,014		
குறுகிய காலப் பாடநெறிக் கட்டணம்		2,569,848	983,336	983,336
வட்டி வருமானம்	**14**	9,806,141	17,899,096	17,909,042
கல்விச் சான்றுறுதி, சான்றிதழ் கட்டணம்		107,300		
சர்வதேச மாநாடு		763,420		
மூலதனக் கொடையின் கடனழிவு			-	8,735,280
பரிமாற்றம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - *நடைமுறை*		**30,215,314**	**36,025,102**	**44,770,328**
மொத்த வருமானம் - *மீண்டுவரும்*		**36,671,106**	**39,916,330**	**48,661,556**
மூலதனம்				
பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - மூலதனம்				
புனர்நிர்மாணத்திற்கான அரசாங்க கொடை - மீண்டுவரும்		-		
அன்பளிப்பு, நன்கொடை – உள்நாடு மற்றும் வெளிநாடு		-		
மொத்த வருமானம் – மூலதனம்		-	-	-
மொத்த வருமானம்		**36,671,106**	**39,916,330**	**48,661,556**
செலவுகள்				
நடைமுறை				

தனியாள் வேதனாதிகள்	**15**	34,256,958	36,011,727	36,011,727
பயணச் செலவுகள்	**16**	149,477	173,988	173,988
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	**17**	609,493	753,288	753,288
பராமரிப்புச் செலவுகள்	**18**	1,200,489	583,886	583,886
ஒப்பந்தச் சேவைகள்	**19**	1,032,292	956,610	956,610
பிற மீண்டுவரும் செலவுகள்	**20**	5,658,632	7,095,241	7,085,241
பணிக்கொடை செலவுகள்		1,529,519	668,746	2,597,195
மனித மூலதனச் செலவுகள்				
மறுபடி விலைமதிப்புப் பற்றாக்குறை				
மொத்தச் செலவுகள் (மூலதனம் சாராத தன்மை)		**44,437,859**	**46,243,486**	**48,161,935**
மூலதனம்				
பெறுமானத் தேய்வு		9,280,633	8,967,152	8,967,152
கடனழிவு – அருவச் சொத்துக்கள்		118,000	118,000	118,000
மொத்தச் செலவுகள் (மூலதனம்சார் தன்மை)		**9,398,633**	**9,085,152**	**9,085,152**
மொத்தச் செலவுகள்		**53,836,492**	**55,328,638**	**57,247,087**
ஆண்டுக்கான மிகை/ பற்றாக்குறை		**(17,165,386)**	**(15,412,308)**	**(8,585,530)**
ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை) – நடைமுறை		(7,776,753)	(6,327,165)	(8,585,530)
ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை) - மூலதனம்		(9,398,633)	(9,085,152)	
		(17,165,386)	**(15,412,308)**	**(8,585,530)**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2024 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசுப் பாய்ச்சல் கூற்று

	2024 ரூபா	2023 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப் பாய்ச்சல்		
வழமையான நடவடிக்கை மூலமான சேமிப்பு / (பற்றாக்குறை))	(17,165,386)	(8,585,530)
காசல்லாத அசைவுச் சீராக்கங்கள்		
குறுகிய கால முதலீடுகளின் வட்டி வருமானம்	(9,798,336)	(17,909,042)
பெறுமானத் தேய்வு	9,280,633	8,967,152
பணிக் கொடை செலவுகள்	1,529,519	2,597,195
மூலதன கொடை இலதாக்கல் சீராக்கம்	-	(9,085,152)
அருவச் சொத்துக்கள் இலதாக்கல்	118,000	118,000
சொத்து அகற்றல் நட்டம்		21,195
PGIE அபிவிருத்திச் சீராக்கம்	(368,421)	-
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு மிகை/ பற்றாக்குறை	**(16,403,991)**	**(23,876,182)**
<u>**தொழிற்படு மூலதன மாற்றங்கள்**</u>		
இருப்புகளில் (அதிகரிப்பு)/ குறைவு	(38,059)	6,442
முற்கொடுப்பனவுகள் மற்றும் வருமதிகளில் அதிகரிப்பு / (குறைவு)	(404,960)	(1,213,543)
வருமதியாகவுள்ள மாணவர் கட்டணம் மற்றும் வட்டியில் (அதிகரிப்பு)/ குறைவு	5,132,716	(443,117)
பதவியணியின் கடன் மற்றும் முற்பணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு	272,010	540,521
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு பின்னரான செயற்பாட்டு மிகை/ பற்றாக்குறை	**5,662,737**	**(299,028)**
பணிக்கொடை கொடுப்பனவுகள்	(1,533,856)	(1,928,449)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**(12,275,110)**	**(26,103,659)**

முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
ஆதனம், பொறித் தொகுதிகள், உபகரணங்களின் கொள்வனவு	(97,637)	(46,000)
புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகளின் கொள்வனவு	-	
முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி	10,737,745	20,112,614
திட்டவட்டமான நோக்கத்திற்காக கிடைத்த நிதி	-	-
PGIE காப்புறுதி நிதியம்	(151,000)	-
குறுங்கால முதலீடுகளின் மீள்பெறுகை	11,688,403	6,979,844
புதிய குறுங்கால முதலீடுகள்	(4,891,770)	-
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**17,285,741**	**27,046,458**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
திறைசேரியிடமிருந்து கிடைத்த மூலதனக் கொடைகள்		
செலவு செய்யப்படாத மூலதனக் கொடைகள்		
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	-	-
ஆண்டுக்கானது	**5,010,631**	**942,799**
காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்	4,275,427	3,332,628
காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்	9,286,058	4,275,427
காசும் காசுக்குச் சமமானவையிலும் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	**5,010,631**	**942,799**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்து/ உரிமைமுதல் மாற்றக் கூற்று

(ரூபா)

	திரண்ட நிதியம் - மீண்டுவரும்	மறுபடி விலைமதிப்பு மிகை	PGIE அபிவிருத்தி நிதியம்	PGIE காப்புறுதி நிதியம்	நன்கொடை நிதியம்	செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை	திரண்ட நிதியம் – மூலதனம்	மொத்தம்
2022 டிசெம்பர் 31 இலுள்ளவாறு மீதி	**94,600,847**	**14,716,266**	**4,547,615**	-	**650,000**	**67,780,438**	**-**	**182,295,166**
முன்னைய ஆண்டுச் சீராக்கம்	199,577				147,633		73,903	421,113
மாணவர் புத்தக இருப்பு	104,541							104,541
திரண்ட பெறுமானத் தேய்வுச் சீராக்கம்	144,126							144,126
ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதியம்				358,823		-	-	358,823
மூலதனக் கொடை இலதாக்கல்	-					(8,735,280)	8,735,280	-
கைரேகைப் அடையாள மின்வருடி இயந்திர அகற்றல் நட்டம்	(45,827)							(45,827)
காலப்பகுதிக்கான மிகை / (பற்றாக்குறை)	(6,327,156)						(9,085,152)	(15,412,308)
செலவு செய்யப்பட்ட மூலதனக் கொடை மாற்றல்				-		(59,045,158)	59,045,158	-
நிதிய வெளிப்பாய்ச்சல்	95,694			(91,377)				4,317
2023 டிசெம்பர் 31 இலுள்ளவாறு மீதி	**88,771,802**	**14,716,266**	**4,547,615**	**267,446**	**797,633**	**-**	**58,769,189**	**167,869,952**

முன்னைய ஆண்டுச் சீராக்கம்	-					-	-	-
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	(97,637)						97,637	-
ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதியம்				145,330				145,330
மூலதனக் கொடை இலதாக்கல்								-
மறுபடி விலைமதிப்பு இலாபம் / நட்டம்								-
காலப் பகுதிக்கான மிகை / (பற்றாக்குறை)	(7,766,753)						(9,398,633)	(17,165,386)
நிதிய வெளிப்பாய்ச்சல்	(48,051)		(368,421)	(151,000)	48,051			(519,421)
2024 டிசெம்பர் 31 இலுள்ளவாறு மீதி	**80,859,360**	**14,716,266**	**4,179,194**	**261,776**	**845,684**	**-**	**49,468,192**	**150,330,473**

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் - ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நியதிச்சட்ட அறிக்கை

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நியதிச்சட்ட அறிக்கையும் நிதிக் கூற்றுக்களும்

1 பொது

1.1 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 106 (1) மற்றும் 107 (ஆ) பிரிவுகள் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு ஏற்பவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவுக்கு ஏற்பவும் இந்நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.2 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் (GAAP) மற்றும் கொள்கைகள் என்பன நிலையாகப் பின்பற்றப்பட்டுள்ளன என்று வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) இணங்க ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

2 நிதிச் சிறப்புக்கூறுகள்

2.1 அரசாங்க நிதியீட்டம்

2.1.1 பெறப்பட்ட மீண்டுவரும் கொடைகள்

விபரம்	2024	2023
	ரூபா.	ரூபா.
மீண்டுவரும்	5,820,000	3,750,000
மூலதனம்	0	0
மொத்தம்	**5,823,000**	**3,750,000**

2.2 செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை)

2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட 15,412,308 ரூபா கொண்ட தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டுக்கான தேறிய பற்றாக்குறை 17,165,386 ரூபாவாகும். நிதிசாரா கொடுக்கல்வாங்கல்களைச் சீராக்கிய பின்னர் நிறுவனத்தின் தேறிய செயற்பாட்டு விளைவு பின்வருமாறு உள்ளது:

விபரம்	**2024**	**2023**
	ரூபா.	**ரூபா.**
தேறிய மிகை/(பற்றாக்குறை)	(17,165,386)	(15,412,308)
நிதிசாரா கொடுக்கல்வாங்கல்கள்		
சேர்ப்பனவு – அருவச்சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் இலதாக்கலுக்கான ஏற்பாடு	9,398,633	9,085,152
பணிக்கொடைக்கான ஏற்பாடு	1,529,519	668,746
கழிப்பனவு – அரசாங்கக் கொடைகளினதும் நன்கொடைகளிலிருந்து பெற்ற சொத்துக்களினதும் இலதாக்கல்		0
நிதிசாராச் செலவுகளைச் சீராக்கிய பின்னர் உள்ள தேறிய செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை)	**(6,237,234)**	**(5,658,619)**

2.3 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்

நான்கு வெவ்வேறு வகைப்பட்ட கடன்கள் (இடர், கணனி, பதவியணி மற்றும் வாகனம்) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுடன், அவை ஆறு வருட காலப்பகுதியில் அறவிடப்படுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 70 இற்கு அமைவாக 12 மாதங்களுக்கு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் வட்டியும் பத்து மாதங்களுக்கு ஒரு வருடத்திற்குள் அறவிடப்பட வேண்டிய கடன் முதலும் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதுடன் மீதமுள்ளவை நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டப்படுகின்றன.

பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) நிர்வகிக்கப்படுகின்றன, ஆதலால் இந்நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளில் இது உள்ளடக்கப்படுவதில்லை.

2.4 காசும் காசுக்குச் சமமானவையும்

அறிந்த காசுத் தொகைகளாக இலகுவாக மாற்றக்கூடியதும் பெறுமதி மாற்றத்தில் முக்கியத்துவம் குறைந்த இடருக்கு உட்பட்டதுமான கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகளாக காசும் காசுக்குச் சமமானவையும் வரையறுக்கப்படுகின்றது.

2024 டிசெம்பர் 31 இலுள்ளவாறு பொழிப்பாக்கப்பட்ட வங்கி மீதிகள் பின்வருமாறு.

	கணக்கு வகை	**2024**	**2023**
		ரூபா.	**ரூபா.**
சேமிப்புக் கணக்குகள்			
	- 174200-226-838310	8,194,027	3,687,879
	- 174200-136-838310	13,828	13,373
நடைமுறைக் கணக்குகள்			
	- 174200-156-838310	878,303	379,424
	- 174200-246-838310	100,000	94,750
	- 174200-336-838310	99,900	100,000
மொத்தம்		**9,286,058**	**4,275,427**

3 இருப்புகள்

2024 டிசெம்பர் 31 இலுள்ளவாறு இருப்புகளின் பௌதிக சரிபார்க்கையானது நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட சுயாதீன சரிபார்க்கைக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன் சரிபார்க்கப்பட்ட மீதிகளானவை 2024 டிசெம்பர் 31 இலுள்ளவாறு நிதி நிலமைக்கூற்றுடன் சீராக்கப்பட்டுள்ளன.

4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 649 மற்றும் SLPSAS 07 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க செய்யப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் மறுபடி விலைமதிப்புச் செய்யப்பட்ட தொகைகளில் பெறுமானத்தேய்வு தரப்பட்டுள்ளது.

5 பணிக்கொடைக்கான ஏற்பாடு

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனத்தின் ஊழியர்களின் பணிக்கொடைக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஊழியர்களின் வகுதிகளுக்கு இணங்க 2024 டிசெம்பர் 31

ஆம் திகதியிலுள்ளவாறு பணிக்கொடைக்கான ஏற்பாட்டுப் பொழிப்பு பின்வருமாறு:

ஊழியர்களின் வகுதி	2024	2023
	ரூபா.	ரூபா.
கல்விசார்	1,612,447	2,410,668
கல்விசாரா	4,422,398	3,628,514
மொத்தம்	**6,034,845**	**6,039,182**

6 எதிர்பாரா நிகழ்வுச் சொத்துக்களும் எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகளும்

நிறுவனத்தினால் தொடுக்கப்பட்ட மற்றும் நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட சட்ட வழக்குகளிலிருந்து எழும் எதிர்பாரா நிகழ்வுச் சொத்துக்களும் எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகளும் SLPSAS 08 இல் விதித்துரைக்கப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களுடன்கூடிய அட்டவணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

7 மாணவர் ஒருவருக்கான செலவு

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மாணவர் ஒருவருக்கான செலவும் கடந்த 5 ஆண்டுகளுக்கான ஒப்பீடும் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	மாணவர்களின் எண்ணிக்கை	பெறுமானத் தேய்வுடன் மாணவர் ஒருவருக்கான செலவு	பெறுமானத் தேய்வின்றி மாணவர் ஒருவருக்கான செலவு ரூபா.	மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் கொடை ரூபா.
2024	420	128,156	105,778	13,857
2023	417	132,659	110,872	8,993
2022	494	116,959	98,686	61,1612
2021	543	95,912	79,299	60,129
2020	571	84,827	69,249	50,963

8 முன்னைய காலப்பகுதித் தவறுகள்

2023 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட முன்னைய காலப்பகுதித் தவறுகளானவை 2024 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு, SLPSAS 03 இற்கு ஒத்திசைவாக முன்வைக்கப்பட்ட முன்னைய காலப்பகுதிக்கான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள்/ உரிமைமுதல் என்பவற்றின் ஆரம்ப மீதிகளின் ஒப்பீட்டுத் தொகைகளை மீளக்குறிப்பிடுவதன் மூலம் திருத்தப்பட்டுள்ளன.

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் - ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் கணக்கீட்டுக் கொள்கைகளும் வெளிப்படுத்தல்களும்

கூட்டாண்மை நிதி தகவல்கள்

1.1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

1.1.2 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை, நுகேகொட, நாவல எனும் முகவரியில் மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டம் மற்றும் அதன் பின்னர் அதில் செய்யப்பட்ட திருத்தங்களின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுக்குடமையான உயர் கல்வி நிறுவனம் ஆகும்.

1.1.3 வெளியீட்டிற்கான அதிகாரமளிப்புத் திகதி

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களானவை நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால், 2025 பெப்ரவரி 27 ஆம் திகதியன்று நடைபெற்ற அதன் 159 ஆவது கூட்டத்திலும் 2025 மே 23 ஆம் திகதியன்று நடைபெற்ற அதன் 161 ஆவது கூட்டத்திலும் வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டன.

1.1.4 அறிக்கையிடல் காலப்பகுதி

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிக் காலப்பகுதி 2024 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2024 டிசெம்பர் 31 ஆம் திகதிவரையாகும்.

1.1.5 நிதிக் கூற்றுக்கள்

2024 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு நிதிச் செயற்றிறன் கூற்று, நிதி நிலமைக் கூற்று, மற்றும் உரிமைமுதல் மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பாதிடப்பட்ட மற்றும் உண்மையான தொகை பற்றிய ஒப்பீடு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கமான குறிப்புகள் ஆகியவற்றை நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

1.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

1.2.1 இசைவாக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) இணக்கமுறும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், நியாயமான முன்வைப்பினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) பின்பற்றப்பட்டுள்ளன.

1.2.2 அளவீட்டிற்கான அடிப்படை

நியாயப் பெறுமதியிலான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தவிர வரலாற்றுக் கிரய மரபொழுங்கில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.3 தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயமான, இலங்கை ரூபாக்களில் (SLR) நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1.2.4 பொருண்மை மற்றும் திரட்சி

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளது. மாறுபட்ட பண்பு அல்லது தொழிற்பாடொன்றைக் கொண்ட விடயங்களானவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் பண்பு அல்லது தொழிற்பாட்டிற்கு இணங்க வகுப்புகளாக திரட்டப்பட்ட பல கொடுக்கல்வாங்கல்களை அல்லது வேறு நிகழ்வுகளை செய்முறைப்படுத்துவதிலிருந்து நிதிக் கூற்றுக்கள் எழுகின்றன.

1.2.5 ஈடாக்கல்

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களால் (SLPSAS) தேவைப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடாக்கப்படவில்லை.

1.2.6 தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சபையானது தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவாக தொடர்வதற்கான ஆற்றலை மதிப்பிட்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய

எதிர்காலத்திற்கு நடவடிக்கையைத் தொடர்வதற்கு போதுமான வளங்களை நிறுவனம் கொண்டுள்ளது என்ற நியாயமான எதிர்பார்க்கையைக் கொண்டுள்ளது. எதிர்காலம் பற்றி கிடைக்கக்கூடிய சகல தகவல்களையும் கருத்திற்கொண்டு, கலைப்பதற்கான அல்லது நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கான தேவையினை சபை எதிர்வுகூறவில்லை. ஆதலால், நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு அடிப்படையை நிறுவனம் தொடர்ந்து பின்பற்றுகின்றது.

1.2.7 ஒப்பீட்டுத் தகவல்கள்

நிதிக் கூற்றுக்களிலுள்ள உருப்படிகளின் முன்வைப்பு அல்லது வகைப்படுத்தல் திருத்தப்படும் போது, ஒப்பீட்டுத் தொகைகளானவை நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்தாலொழிய மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டுத் தொகைகளை மீள்வகைப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ள போது, நிறுவனமானது, தொகைகள் மீள்வகைப்படுத்தப்பட்டிருந்திருப்பின் செய்யப்பட்டிருந்திருக்கும் சீராக்கங்களின் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது.

1.2.8 நடைமுறை எதிர். நடைமுறை சாரா வகைப்படுத்தல்

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) அமைவாக நடைமுறை/ நடைமுறை சாரா வகைப்படுத்தலின் அடிப்படையில் நிதி நிலமைக் கூற்றில் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நிறுவனம் முன்வைக்கின்றது.

1.3 பின்பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.3.1 இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSAS) பிரயோகம்

நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைக்கும் போது நிறுவனமானது இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களை (SLPSAS) பின்பற்றியுள்ளது.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) - SLPSAS தொகுதி (iii) இல் பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறை 2024.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பின்பற்றப்பட்டுள்ளதுடன் 2023.01.01 இற்கான ஒப்பீட்டுத் தொகைகளும் காட்டப்பட்டுள்ளதுடன் மீளாய்வின் கீழான ஆண்டின் போது கணக்கீட்டுக் கொள்கைகளில் வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெறவில்லை.

1.3.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு திறனாய்வுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது நிதியாண்டின் முடிவிலுள்ளவாறு வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்களினதும் எதிர்பாரா பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகை என்பற்றைப் பாதிக்கக்கூடிய திறனாய்வுத் தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் முகாமை உருவாக்குவதைத் தேவைப்படுத்துகின்றது.

1.3.4 வருமானம் கண்டறிதல்

மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்கக் கொடை மற்றும் நானாவித கருத்திட்ட வருமானம் மற்றும் ஏனைய கொடைகள், சுய நிதியீட்டச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய அனைத்து வருமானங்கள் ஆகியன, அவை பெறப்படும் போதும் பொருத்தமானதாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் உள்ளவிடத்தும் கண்டறியப்பட்டுள்ளன. வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளன. 2024.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வந்த இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் - பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறையின் பின்பற்றலின் அடிப்படையில், மூலதனக் கொடைகளிலிருந்தான வருமானமும் நிதிச் செயற்றிறன் கூற்றில் கண்டறியப்பட்டுள்ளன.

1.3.5 அரசாங்கக் கொடைகள்

SLPSAS 01 இன் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்கக் கொடைகள் நிறுவனத்தால் பெறப்படும் போது மாத்திரமே கண்டறியப்படுகின்றன. 2024.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வந்த இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் - பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறையின் இசைவாக்கத்துடன், மூலதனக் கொடைகள் மற்றும் நன்கொடையாக அளிக்கப்பட்ட சொத்துக்கள் போன்றவற்றிலிருந்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படும் போது, நிதிச் செயற்றிறன் கூற்றில் பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் - மூலதனத்தின் கீழ் காட்டப்படுகின்றன. ஆண்டுக்காகப் பெறப்பட்ட மீண்டுவரும் கொடையானது நிதிச் செயற்றிறன் கூற்றில் பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் – மீண்டுவரும் ஆக கண்டறியப்பட்டுள்ளது. மேலும், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் பெறப்பட்ட மூலதனக் கொடைகளானவை மூலதனக் கொடை செலவழிக்கப்பட்ட மற்றும் செலவழிக்கப்படாத கணக்குகளுக்கு ஊடாக கணக்கிடப்பட்டுள்ளன அத்துடன் அதன் விளைவானது நேரடியாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.3.6 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (PPE)

1.3.6.1 கண்டறிதல் அடிப்படை

சொத்துடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்று சொத்தின் கிரயத்தை நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருப்பின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கண்டறியப்படுகின்றன.

1.3.6.2 அளவீட்டிற்கான அடிப்படை

சொத்தொன்றாக கண்டறிவதற்குத் தகுதிபெறும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஒரு வகையானது ஆரம்பத்தில் அதன் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. சொத்தின் கொள்முதலுக்கு நேரடிக் காரணமான செலவினத்தையும் அதன் பின்னரான செலவுகளையும் கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயமானது மூலப்பொருள் செலவு, நேர்கூலி, சொத்தின் உத்தேச பாவனைக்காக அதனைத் தொழிற்படு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடிக் காரணமான வேறு ஏதேனும் செலவுகள், சொத்து உருப்படிகளைப் பாகங்களாகப் பிரித்து, அகற்றி அவை அமைக்கப்பட்டுள்ள தளத்தில் மீளமைப்பதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. தொடர்புபட்ட உபகரணத்தின் தொழிற்பாட்டிற்கு இன்றியமையாத கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளானது அந்த உபகரணத்தின் பகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது.

கிரயத்தில் ஆரம்பக் கண்டறிதலின் பின்னர் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் முழு வகைக்குமான கிரய மாதிரியை நிறுவனம் பயன்படுத்துகின்றது. சொத்துக்களின் ஒரு வகையின் கொண்டுசெல்லல் தொகையானது மறுபடி விலைமதிப்பின் விளைவாக அதிகரிக்கப்பட்டால், அவ்வதிகரிப்பானது மறுபடி விலைமதிப்பு மிகைக்கு நேரடியாகச் செலவு வைக்கப்பட்டுள்ளது, அத்துடன் சொத்துக்களின் ஒரு வகையின் கொண்டுசெல்லல் தொகையானது மறுபடி விலைமதிப்பின் விளைவாக குறைக்கப்பட்டால், அது மிகையில் அல்லது பற்றாக்குறையில் கண்டறிப்பட்டுள்ளது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத் தேய்வேற்பாடானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 649 மற்றும் SLPSAS 07 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க செய்யப்பட்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சகல வகுதிகளும் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டால் தொடர்ந்துவரும் ஆண்டுகளின் தொடக்கத்தில் அவை மறுபடி விலைமதிப்புச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் மறுபடி விலைமதிப்புச் செய்யப்பட்ட தொகைகளில் பெறுமானத் தேய்வு தரப்பட்டுள்ளது. மறுபடி விலைமதிப்புச் செய்யப்பட்ட உரிய ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட/ நிர்மாணிக்கப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சகல வகுதிகளும் கிரயத்தில்

காட்டப்பட்டுள்ளதுடன் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் பெறுமானத் தேய்வு தரப்பட்டுள்ளது.

1.3.6.3 சொத்துக்களை கண்டறிதலிலிருந்து நீக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையானது அகற்றலில் அல்லது எந்தவொரு எதிர்கால பொருளாதார நன்மைகளும் அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படாத போது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்தினை கண்டறிதலிலிருந்து நீக்குவதிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, சொத்து கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் ஆண்டில் மிகை அல்லது பற்றாக்குறையில் கண்டறியப்படுகின்றது.

1.3.6.4 மூலதன நடைபெறும் வேலை

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்படுவதுடன் நிறுவனம் உத்தேசிக்கும் விதத்தில் இயங்குவதற்கான ஆற்றலுடன் அது இருப்பதற்கு அவசியமான அமைவிடத்திலும் நிலமையிலும் அது இருக்கும் போது உரிய சொத்துக்கு மாற்றப்படுகின்றது.

1.3.6.5 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பெறுமானத்தேய்வு

நிறுவனமானது பெறுமானத் தேய்வு தொடர்பில் நேர்கோட்டு முறையினைப் பின்பற்றுகின்றது, அதில் காணி தவிர ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன கீழே குறிப்பிடப்பட்ட வீதங்களில் பெறுமானத் தேய்விடப்படுவதுடன், பெறுமானத் தேய்வுச் செலவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 649 இன் அடிப்படையில் நிதிச் செயற்றிறன் கூற்றில் கண்டறியப்படுகின்றது.

சொத்துக்களின் வகை	%
கட்டடங்கள்	5%
பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களும்	20%
கணனிகளும் துணைக்கருவிகளும்	20%
தளபாடமும் பொருத்துகளும்	10%
அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள்	20%
ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	20%
நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும்	20%
பட்டமளிப்பு விழா அங்கிகள்	20%

சொத்தொன்றின் பெறுமானத்தேய்வானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள திகதியிலிருந்து, அல்லது சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் சொத்து பூர்த்தியாக்கப்பட்டு பாவனைக்குத் தயாராகவுள்ள திகதியிலிருந்து ஆரம்பிக்கின்றது. சொத்து விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும் திகதி அல்லது சொத்து கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் திகதி ஆகியவற்றில் முதலில் நிகழும் திகதியில் பெறுமானத்தேய்வு முடிவுறுகின்றது.

1.3.6.6 நிறுவனத்தின் காணியும் கட்டடங்களும்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது திறந்த பல்கலைக்கழகத்தின் இணைந்த நிறுவனமொன்றாக செயற்படுகின்றமையினால், நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட, நிறுவனத்தின் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி இந்த நிறுவனத்திற்கு சட்டபூர்வமாக உரித்தளிக்கப்படவில்லை. நிதிக் கூற்றுக்களில் காணியின் உரிமையை இனங்கண்டு வெளிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் கட்டளைச்சட்டத்தில் எந்தவிதமான சட்ட ஏற்பாடும் இல்லை.

பதினைந்து (15) பேர்ச் விஸ்தீரணமான காணி 2016 ஆம் ஆண்டில் 22,500,000.00 ரூபாவாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1.4 அருவச் சொத்துக்கள்

1.4.1 கண்டறிதல் அடிப்படை

சொத்துடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்று சொத்தின் கிரயத்தை நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருப்பின் நிறுவனமானது அருவச் சொத்தைக் கண்டறிகின்றது.

1.4.2 அளவீட்டிற்கான அடிப்படை

தனித்தனியாகக் கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை ஆரம்பக் கண்டறிதலில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்பக் கண்டறிதலின் பின்னர், கடனழிவையும் பெறுமதிக்குறைவு நட்டங்கள் ஏதுமிருப்பின் அவற்றையும் கழித்த கிரயத்தில் அருவச் சொத்துக்கள் கொண்டுசெல்லப்படுகின்றன.

1.4.3 அடுத்துறும் செலவினம்

அடுத்துறும் செலவினமானது, அது தொடர்புபடுகின்ற குறித்த சொத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்களை அது அதிகரிக்கும் போது

மாத்திரமே அது மூலதனமாக்கப்படும். ஏனைய சகல செலவுகளும் உறப்படும் போது நிதிச் செயற்றிறன் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

1.4.4 பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம், கடனழிவு (இலதாக்கல்) மற்றும் பெறுமதிக்குறைவு

வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்களானவை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலங்களுக்கு கிரயத்தை குறைப்பதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்படுவதுடன் பொதுவாக நிதிச் செயற்றிறன் கூற்றில் கண்டறியப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்களானவை வருடாந்தம் மற்றும் அருவச் சொத்து பெறுமதி குறைக்கப்படலாம் என்ற சுட்டிக்காட்டல் உள்ள போதெல்லாம் பெறுமதிக்குறைவிற்காக மதிப்பிடப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் கடனழிவு செய்யப்படுகின்ற காலப்பகுதி 05 வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.

கடனழிவு முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமுடையதாகவிருப்பின் சீராக்கப்படுகின்றன.

1.4.5 இருப்புகள்

2024 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு நிறுவனத்தின் இருப்புகள் பௌதிக ரீதியில் சரிபார்க்கப்பட்டுள்ளதுடன் முதல் வந்தது முதல் வெளியே (FIFO) அடிப்படையில் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

1.4.6 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான பன்னிரண்டு மாதங்களுக்குள் பெறப்படுவதற்கு நிலுவையாகவுள்ள வியாபார மற்றும் ஏனைய வருமதிகளானவை SLPSAS 01 இற்கமைவாக மதிப்பிடப்பட்ட தொகையில் குறிப்பிடப்படுகின்றன. அறவிடமுடியாத மற்றும் சந்தேகத்திற்குரிய வருமதிகளுக்கு எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

1.4.7 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, நடைமுறை, சேமிப்பு மற்றும் குறுங்கால அழைப்பு வைப்புக் கணக்குகளில் உள்ள மீதிகளை காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றன. மேலும், காசும் காசுக்குச் சமமானவையும் பற்றிய விபரங்களானவை கணக்குகள் பற்றிய கூற்றின் குறிப்பு இல. 1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4.8 முதலீடுகள்

திறைசேரி உண்டியல்கள் மீதான வங்கிக் கணக்குகளில் மற்றும் அரச வங்கிகளிலுள்ள தவணை வைப்புகளில் வரவிலுள்ள தற்காலிக மிகை நிதியங்களில் நிறுவனம் முதலிட்டுள்ளது. அதற்காக உறப்படும் வட்டியானது நிதியாண்டு காலப்பகுதியின் முடிவில் கொண்டுசெல்லல் பெறுமதியுடன் சீராக்கப்பட்டுள்ளதுடன் நிதிச் செயற்றிறன் கூற்றுக்களில் “மீண்டுவரும்/ பரிமாற்ற” வருமானமாக காட்டப்பட்டுள்ளது. முதலீடுகள் மற்றும் முதலீடுகள் மீதான வட்டி வருமானம் பற்றிய மேலும் விவரங்கள், குறிப்பு 04 மற்றும் 14 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4.9 செலவினம் கண்டறிதல்

உறப்பட்ட செலவுக்கும் குறிப்பிட்ட வருமான வகைகளின் உழைப்புகளுக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் நிதிச் செயற்றிறன் கூற்றில் செலவுகள் கண்டறியப்படுகின்றன. நிறுவனத்தை நடாத்திச் செல்வதிலும் ஆதனங்களை வினைத்திறனான நிலைமையில் பேணுவதிலும் உறப்பட்ட சகல செலவுகளும் நிதிச் செயற்றிறன் கூற்றுக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

1.4.10 ஆராய்ச்சி கொடைகள்

ஆராய்ச்சி கொடைகளின் வருமானம் மற்றும் செலவினத்தை கணக்கிடுவதற்காக புறம்பான பேரேட்டுக் கணக்குகளை நிறுவனம் பேணுகின்றது. ஆராய்ச்சி கொடைகள் இலாப நோக்கமற்ற அடிப்படையில் தொழிற்படுத்தப்படுவதால் தனியான பேரேட்டுக் கணக்குகளின் கீழ் கணக்கிடப்பட்ட செலவுகளானவை நிதிச் செயற்றிறன் கூற்றில் ஆராய்ச்சிக் கொடைகள் பற்றிய செலவினமாக காட்டப்பட்டுள்ளதுடன் அச்செலவுக்கு சமமான தொகையானது நிதிச் செயற்றிறன் கூற்றில் ஆராய்ச்சி கொடைகள் பற்றிய வருமானமாக காட்டப்படுகின்றது. 2024.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வந்த இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் - பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறையின் பின்பற்றலுடன், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன ஆராய்ச்சிக் கொடைகளைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் போது, அவை நிதிச் செயற்றிறன் கூற்றில் மூலதனக் கொடையிலிருந்தான (பரிமாற்றம் சாராத) வருமானத்தின் கீழ் காட்டப்படும். 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இந்த தனித்தனியான ஆராய்ச்சிக் கொடைகளின் வரவிலுள்ள மீதிகளானவை நிதி நிலமைக் கூற்றில் ஒதுக்குகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

1.4.11 பிற்போடப்பட்ட வருமானம்

பட்டப்பின் படிப்பு பாடநெறிகள், குறுங்கால பாடநெறிகள், பகுதிநேர பாடநெறிகள் போன்றவற்றுக்கூடாக உருவாகும் வருமானம் மற்றும் செலவினத்தை கணக்கிடுவதற்காக

புறம்பான பேரேட்டுக் கணக்குகளை நிறுவனம் பேணுகின்றது. தனியான பேரேட்டுக் கணக்குகளின் கீழ் கணக்கிடப்பட்ட செலவுகளானவை நேரடிச் செலவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதிச் செயற்றிறன் கூற்றில் காட்டப்பட்டுள்ளன. 2023.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வந்த இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் - பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறையின் பின்பற்றலுடன், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன இச்செயற்பாடுகளின் மூலம் கொள்வனவு செய்யப்படும் போது, அவை நிதிச் செயற்றிறன் கூற்றில் மூலதனக் கொடையிலிருந்தான (பரிமாற்றம் சாராத) வருமானத்தின் கீழ் காட்டப்படும். இச்செயற்பாட்டு கணக்குகளின் வரவிலுள்ள மீதிகளானவை நிதிச் செயற்றிறன் கூற்றில் ஒதுக்குகள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

1.4.12 ஏனைய நிதியங்கள்

நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டின் கீழ் வராத பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கூடாக நிறுவனம் நிதியங்களை உருவாக்குவதுடன் இச்செயற்பாடுகளின் கொடுக்கல்வாங்கல்களை கணக்கிடுவதற்காக புறம்பான பேரேட்டுக் கணக்குகள் பேணப்படுகின்றன. தனியான பேரேட்டுக் கணக்குகளின் கீழ் கணக்கிடப்பட்ட செலவுகளானவை நிதிச் செயற்றிறன் கூற்றில் ஏனைய கருத்திட்டங்கள் பற்றிய செலவினமாக காட்டப்பட்டுள்ளதுடன் அச்செலவுக்கு சமமான தொகையானது நிதிச் செயற்றிறன் கூற்றில் ஏனைய செயற்பாடுகளிலிருந்தான வருமானமாக காட்டப்படுகின்றது. 2023.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வந்த இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் - பரிமாற்றம் சாராத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானம் SLPSAS 11 இற்கேற்ப மூலதனக் கொடைகளுக்கான மாற்றீடான கணக்கீட்டு முறையின் பின்பற்றலுடன், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன ஏனைய நிதியங்களைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டால் அத்துடன் கொள்வனவு செய்யப்படும் போது, அவை நிதிச் செயற்றிறன் கூற்றில் மூலதனக் கொடையிலிருந்தான (பரிமாற்றம் சாராத) வருமானத்தின் கீழ் காட்டப்படும். இந்தக் கணக்குகளில் உள்ள மீதிகளானவை நிதி நிலமைக் கூற்றில் ஒதுக்குகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

1.4.13 நன்கொடை நிதியம்

பயன்படுத்தப்படாத நன்கொடையாக நிதியங்கள் பெறப்படுமிடத்து, அத்தகைய முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் மாத்திரமே கண்டறியப்பட்டு வருமானமாகப் பயன்படுத்தப்படலாம். மேற்போந்த வகுதிகள் ஒவ்வொன்றின் கீழும் கிடைக்கத்தக்க நிதியங்களிலிருந்தான முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய

இலாபங்களானவை, உரிய உடன்படிக்கை அல்லது நிகழ்ச்சிக்குறிப்பு வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, பொருத்தமான நிதியங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பரீட்சையிலும் அடைந்த மிகச்சிறந்த செயற்றிறனுக்காக பதக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் வழங்குவதே இந்நிதியங்களின் நோக்கங்களாகும்.

1.4.15 வரிகள்

1.4.15.1 வருமான வரிகள்

தற்போதுள்ள வரி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நிறுவனமானது அதன் சாதாரண வியாபார நடவடிக்கையிலிருந்தான வருமானத்தின் மீது வருமான வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதன்று.

